
# කාර්යය සාධන වාර්තාව - 2015
# செயலாற்றுகை அறிக்கை - 2015
# Performance Report -2015









නිවාස හා ඉදිකිරීම් අමාත්‍යාංශය
வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு
Ministry of Housing & Construction

## வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு

# செயலாற்றுகை அறிக்கை

# 2015

இரண்டாம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை.

# கௌரவ அமைச்சரின் செய்தி



கடந்த ஆண்டு இலங்கையின் வீடமைப்பு அபிவிருத்தி சம்பந்தமான புதிய கொள்கைசார் தீர்மானங்களும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்ட ஆண்டாக பதிவாகின்றது. இந்நாட்டின் வீடமைப்பு அபிவிருத்தியின் பொற்காலமாக கருதப்படுகின்ற ரணசிங்க பிரேமதாசவின் யுகத்தின் பின்னர் "சொந்தமான ஒரு வீட்டின் உரிமையை" பெற்றுக்கொள்ளும் மக்களின் எதிர்பார்ப்பு அவர்களின் உள்ளங்களில் இருந்து தூரமாகியிருப்பது 2015ஆம் ஆண்டளவில் இந்நாட்டில் வாழும் வீட்டு உரிமைகள் இல்லாத குடும்பங்களின் எண்ணிக்கை 12 – 15 இலட்சமாக அதிகரித்துள்ளதன் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.

2015 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கையில் இடம்பெற்ற அரசியல் மாற்றத்தை அடுத்து தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் மீண்டும் துரித வீடமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டம் ஒன்றுக்கு நாம் முன்னுரிமை வழங்கி செயற்படுகின்றோம். அதற்கமைய 100 நாள் துரித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக சமுதாயத்தின் பங்கேற்புடன் புதிதாக 50,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கு மிகக்குறைந்த வட்டி விகிதத்தின் கீழ் ரூபா 100000/= வீதம் கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்கமைய நாடு முழுவதிலும் உள்ள சகல தேர்தல் தொகுதிகளுக்கும் 300 புதிய வீடுகள் வீதம் நிர்மாணிப்பதற்கு இலக்காகக் கொள்ளப்பட்டது. இதற்கு மேலதிகமாக நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வறிய குடும்பங்களுக்கு வீடமைப்பு உதவிகளைப் பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அரசாங்கம் மேற்கொண்டுள்ள தீர்மானத்துக்கமைய இந்த சமுதாய பங்கேட்பு வீடமைப்பு அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு உதாகம திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன், ஜூன் மாதம் 23ஆந் திகதியை தேசிய வீடமைப்பு தினமாக பிரகடனம் செய்தமையானது இந்த ஆண்டில் பெற்றுக் கொண்ட விசேட வெற்றியாகும்.

மேலும் இந்த ஆண்டில் "மாதிரிக் கிராம்" வேலைத்திட்டத்தை மீண்டும் முனைப்புடன் அமுல்படுத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் இதன் ஆரம்ப நடவடிக்கையாக நாடு முழுவதிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 17 மாவட்டங்களில் 25 வீடுகளைக் கொண்ட 38 மாதிரிக் கிராமங்களை நிர்மாணிப்பதை முன்னெடுக்க முடிந்ததை வீடமைப்பு அபிவிருத்தித் துறையின் முன்னேற்றத்துக்காகப் பெற்றுக் கொண்டு சாதகமான அணுகுமுறையாகக் குறிப்பிட முடியும். இதன் மூலம் அரசாங்கம் வழங்குகின்ற 15-20 பர்சர்ஸ் அளவான காணிப்பகுதியில் சமுதாயத்தின் பங்கேற்புடன் வீடொன்றை நிர்மாணிப்பதற்காக நிவாரண வட்டிக் கடனாக ரூபா 250,000 வழங்கப்படுகின்றது. இந்த வேலைத்திட்டத்தை விஸ்தரித்து 2016ஆம் ஆண்டில் நாடு முழுவதிலும் 200 மாதிரிக் கிராமங்களை தாபிப்பது எமது எதிர்பார்ப்பாகும்.

"சகலருக்கும் திறந்தவெளிகள்" என்ற தொனிப்பொருளின் கீழ் நடைபெற்ற உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு பரந்தளவில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நாடு முழுவதிலும் அமுல்படுத்தும் ஆற்றல் கிடைத்ததுடன், நாட்டின் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் சுவர்களுக்கு சாந்து பூசப்படாத ஆயிரம் வீடுகளை ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் தேர்ந்தெடுத்து மேற்படி 25000 வீடுகளினதும் நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக கட்டிடப் பொருட்களை வழங்குவது இதன் முக்கிய கருத்திட்டமொன்றாகும். மேலும், வீடமைப்புத் திட்டங்களிலுள்ள வீடமைப்புச் சங்கங்களை இற்றைப்படுத்தல், "நகமு புறவற" திட்டத்தின் கீழ் தலைநகரில் உள்ள பண்டைய தொடர்மாடி வீடமைப்புத் திட்டங்களின் கட்டிடங்களை மறுசீரமைத்து அவற்றின் உரிமையை அதில் வசிக்கும் உரிமையாளர்களிடம் கையளித்தல், தலைநகரம் மற்றும் வடக்கு - கிழக்கு உள்ளிட்ட

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் உள்ள வீட்டு உரிமையாளர்களுக்கு அறுதி உறுதிகளை கையளித்தல் போன்றனவும் உலக குடியிருப்புத் தினத்தை முன்னிட்டு அமுல்படுத்தப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்களாகும்.

இந்த நாட்டுக்கு பொருத்தமானவாறு நிலையான நிர்மாணிப்புக் கொள்கை ஒன்றை தயார்செய்யும் முறையியலும் இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன், மேற்படி கொள்கையை துரிதமாக அமுல்படுத்துவது எமது எதிர்பார்ப்பாகும். கடந்த பல ஆண்டுகளாக அரசியல் மயமாக்கப்பட்டதனால் அழிவுப்பாதையில் பயணித்த இந்த நாட்டின் முன்னோடி நிர்மாணிப்பு பொறியியல் நிறுவனமான அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தை மீண்டும் முனைப்புடன் செயற்படக்கூடிய நிலைமைக்கு இந்த ஆண்டில் கொண்டுவர எமக்கு முடிந்துள்ளது. அதற்கமைய அடுத்துவரும் 2016 ஆம் ஆண்டில் நிர்மாணிப்புத் துறையில் விசேட முன்னேற்றம் ஒன்றை அடைந்து கொள்வது எமது மற்றொரு இலக்காக உள்ளது.

அடுத்து வரும் 60 மாத காலப்பகுதிக்குள் நகர்ப்புற நடுத்தர வகுப்பினரான மக்களுக்காக 500000 புதிய வீடுகளை நிர்மாணிக்கின்ற கௌரவ பிரதம அமைச்சரின் வேலைத்திட்டத்திற்கு வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு விசேட பங்களிப்பை வழங்கும். இதற்கு எமது அமைச்சின் கீழ் காணப்படுகின்ற தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, அரச பொறியியல் கூட்டுத்தாபனம், கட்டிடத் திணைக்களம், ஓசன் வீவ் டிவலப்மன்ட் தனியார் கம்பனி, கட்டிடப்பொருட்கள் கூட்டுத்தாபனம் போன்ற நிறுவனங்கள் ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கும்.

இந்த நாட்டின் துரித வீடமைப்பு அபிவிருத்திக்கு அரச துறையிடமிருந்து உரிய பாராட்டு உரித்தாகியுள்ளமை எம்மை மென்மேலும் ஊக்கப்படுத்துவதற்கு காரணமாக அமைந்துள்ளதுடன் வெளிநாடுகளில் இருந்து கிடைக்கின்ற அன்பளிப்புக்கள் மற்றும் தனியார் துறை அன்பளிப்பாளர்களிடம் இருந்து கிடைக்கின்ற உதவிகளும் எம்மை மென்மேலும் ஊக்குவிக்கின்றன. அநாவசியமான செலவினங்கள் மற்றும் வீண்விரயத்தினை முற்றாக ஒழித்து வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறையில் உற்பத்தித்திறன்மிக்க சமூக சேவையொன்றை நிறைவேற்றுவது எமது பொறுப்பாகும். 2025ஆம் ஆண்டளவில் இந்நாட்டில் வீடுகள் இல்லாத சகல குடும்பங்களுக்கும் தமக்கே உரித்தான வீடொன்றை உரித்தாக்கிக்கொடுப்பது எமது இலக்காகும்.

**சஜித் பிரேமதாச**

**வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர்**

## கௌரவ பிரதி அமைச்சரின் செய்தி



இலங்கையின் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறையில் மேற்கொள்ளப்படுகின்ற துரித அபிவிருத்திச் செயற்பாட்டில் முன்னோக்கிப் பயணிப்பவர் என்ற வகையில் மிளிரும் சேவையொன்றை ஆற்றிவருகின்ற வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் 2015 செயலாற்றுகை அறிக்கைக்கு செய்தி ஒன்றை வெளியிடக் கிடைத்ததானது பெருமகிழ்ச்சியளிக்கின்றது.

எமது நாட்டில் வாழும் ஒவ்வொரு பிரஜைக்கும் தமக்கே உரித்தான ஒரு வீட்டின் உரிமையை உறுதிசெய்து அமுல்படுத்தப்படுகின்ற ‘‘செமட்ட செவன’’ யாவருக்கும் புகலிடம் தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 50,0000 குடும்பங்களுக்கு வீடமைப்பு வசதிகளை பெற்றுக் கொடுக்கும் வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், சுமார் ஆயிரம் குடும்பங்களுக்கு அடிப்படை வீடொன்றின் உரிமையைப் பெற்றுக் கொடுத்து அமுல்படுத்தப்படுகின்ற 38 கிராமங்களைக் கொண்ட மாதிரி வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம், முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் 25,000 வீடுகளை புனரமைப்பதற்காக அமுல்படுத்தப்படுகின்ற சீமெந்து உதவிகளை வழங்கும் நிகழ்ச்சிட்டம் ஆகியவற்றை கடந்த ஆண்டு தற்போதைய அரசு அமுல்படுத்திய அபிவிருத்திச் செயன்முறையின் விசேட பணிகளாகக் குறிப்பிடப்படலாம்.

அத்துடன், முதல் தடவையாக பிரகடனம் செய்யப்பட்ட, யூன் மாதம் 23 ஆம் திகதி ‘‘தேசிய வீடமைப்புத் தினம்’’ மற்றும் ஒவ்வொரு வருடமும் முதலாவது திங்கட்கிழமை கொண்டாடப்படுகின்ற ‘‘உலக குடியிருப்புத் தினம்’’ ஆகியவற்றை முன்னிட்டு இம்முறை வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்திக்கான பல்வேறு அபிவிருத்திப் பணிகளை வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்கள் அமுல்படுத்தியுள்ளன.

அவ்வாறே 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படுகின்ற நடுத்தர வருமானம் பெறும் மக்களின் வீடமைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக 05 இலட்சம் வீடுகளை நிர்மாணிக்கின்ற தேசிய வேலைத்திட்டதிற்கு அமைய, கொழும்பு நகரில் இதுவரை தீர்க்கப்படாதுள்ள வீடமைப்புச் சிக்கல்களுக்கும், நாட்டின் ஏனைய நகர்ப்புறப் பிரதேசங்களின் வீடமைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் விசேட பங்களிப்பை வழங்கும் வாய்ப்புக் கிடைக்கும்.

மேலும், இலங்கையில் அமுல்படுத்தப்பட்டுள்ள பாரிய அபிவிருத்திச் செயன்முறையின் பிரதான பங்காளராக மாறி பெருந்தெருக்களை நிர்மாணித்தல், கட்டிடங்களை நிர்மாணித்தல், சுரங்கப் பாதைகளையும் பாலங்களையும் நிர்மாணித்தல், நீர்ப்பாசனத் திட்டங்கள் மற்றும் நீர்வழங்கல் திட்டங்களை அமுல்படுத்தல் மூலம் நிர்மாணிப்புத்துறையின் துரிதமான அபிவிருத்திக்கு பங்களிப்பை வழங்கி எமது அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிர்மாணத்துறை நிறுவனங்கள் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் பெரும் செயற்பணியொன்றை நிறைவேற்றியுள்ளன என்பதை விசேடமாகக் குறிப்பிட விரும்புகின்றேன்.

இந்த பணிகளை நிறைவேற்றிக் கொள்ளும்போது மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களும் கௌரவ பிரதம அமைச்சர் ரணில் விக்ரமசிங்க அவர்களும் எமது அமைச்சுக்கு தலைமைத்துவம் வழங்குகின்ற கௌரவ சஜித் பிரேமதாச அவர்களும் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பதவியணியினரும் அமைச்சின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகின்ற சகல நிறுவனத் தலைவர்கள் உள்ளிட்ட அவற்றின் பதவியணியினரும் வழங்கிய ஒத்துழைப்பு தொடர்பில் எனது நன்றியை தெரிவிக்க இதனை வாய்ப்பாக கொள்கின்றேன்.

**இந்திக பண்டாரநாயக்க (பா.உ.)**

**வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரதி அமைச்சர்**

## செயலாளரின் செய்தி



இலங்கையில் வீடமைப்பு அபிவிருத்தித் துறையில் முன்னோடியாக செயற்படுகின்ற வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு புதிய அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைய 2015ஆம் ஆண்டில் அமுல்படுத்தியுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கிய 2015ஆம் ஆண்டுக்கான அமைச்சின் செயலாற்றுகை அறிக்கைக்கு பெருமகிழ்ச்சியுடன் வாழ்த்துச் செய்தி ஒன்றை வெளியிடுகின்றேன்.

2015 ஆம் ஆண்டு சவால்மிக்க ஒரு ஆண்டாக இருந்தது. புதிய அரசாங்கத்தின் கீழ் அமைச்சின் புதிய அமைச்சராக கௌரவ சஜித் பிரேமதாச அவர்களும் பிரதி அமைச்சராக கௌரவ இந்திக பண்டாரநாயக்க அவர்களும் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டதுடன், அதுவரை மேற்கொள்ளப்பட்டு வந்த சகல அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் பற்றிய பூரண மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்ட பின்னர், அடுத்த கட்ட நடவடிக்கைகளை மிகவும் சரியாகவும் நல்ல முகாமைத்துவத்துடனும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வீடொன்று இல்லாத ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு வீட்டின் உரித்தைப் பெற்றுக்கொடுப்பதை நோக்காகக் கொண்டு வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கான பல வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் இந்த ஆண்டில் அமுல்படுத்தப்பட்டன. அவற்றில் புதிய வீடுகளை நிர்மாணித்தல், வீடுகளை புனரமைத்தல், பழைய தொடர்மாடி வீடுகளை மறுசீரமைத்தல் போன்றன முக்கியமானவையாகும். மேலும் அரசாங்கத்தின் வாடகை வீடுகளில் வசிப்பவர்களுக்கு அறுதி உறுதிகளை கையளிப்பதன் மூலம் வீடுகளில் வாழ்வதற்கான உரிமையும் உறுதிப்படுத்தப்பட்டது.

இலங்கையின் நிர்மாணிப்புக் கைத்தொழில் துறையை வினைத்திறனும் நம்பகத் தன்மையும்மிக்க கைத்தொழில் ஒன்றாக மாற்றியமைக்கும் நோக்கத்துடன் பாராளுமன்றத்தில் அங்கீகரித்துக் கொள்ளப்பட்ட நிர்மாணிப்புக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்துக்கமைய வரைவு செய்யப்பட்ட தேசிய நிர்மாணிப்புக் கொள்கை தற்போது மக்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிர்மாணிப்புக் கைத்தொழிலில் உள்ள அனைத்துப் பணிகளையும் ஒரே இடத்திலிருந்து ஒழுங்குபடுத்தி நிர்மாணிப்புத்துறை நிறுவனங்களை வலுவூட்டி இலங்கையில் மேற்கொள்ளக்கூடிய துரித அபிவிருத்தியின் பங்காளியாக மாறி சிறந்த தரமும் வினைத்திறனும் மிக்க சேவைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு இதன்மூலம் வாய்ப்புக்கிடைக்கும்.

வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் நிர்மாணிப்புக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கான கொள்கைசார் தீர்மானங்களை மேற்கொண்டு தேவையான வளங்கள் மற்றும் உதவிகளைப் பெற்றுக்கொடுத்து சரியான முகாமைத்துவத்துடன் அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக பூரண அர்ப்பணிப்புடன் நாம் செயற்பட்டுள்ளோம். இவ்வனைத்து வெற்றிகளையும் அடைந்து கொள்வதற்காக சரியான தலைமைத்துவத்தைப் பெற்றுக்கொடுத்து தொடர்ச்சியான ஆலோசனைகளை வழங்கி வருகின்ற கௌரவ அமைச்சர் சஜித் பிரேமதாச அவர்களுக்கும் தொடர்ச்சியான ஒத்துழைப்பை வழங்கி ஊக்குவிக்கின்ற கௌரவ பிரதி அமைச்சர் இந்திக்க பண்டாரநாயக்க அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அவ்வாறே இவ்வனைத்துப் பணிகளையும் வெற்றிகரமாக்கிக் கொள்வதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற மேலதிக செயலாளர்கள் உள்ளிட்ட அமைச்சின் அனைத்து அலுவலர்களுக்கும் அபிவிருத்திச் செயற்பாட்டுக்கு நேரடியாக பங்களிப்பினை வழங்கி அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்ற அமைச்சின் கீழ் காணப்படுகின்ற அனைத்து நிறுவனங்களினதும் நிறுவனத் தலைவர்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த பதவியணிருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**டபிள்யூ. கே. கே. அத்துகோரள**

**செயலாளர்,**

**வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு.**

## உள்ளடக்கம்


| | | பக்க இல |
|---|---|---|
| 01. | அறிமுகம் | 31 - 33 |
| 02. | அமைச்சின் நோக்கும் செயற்பணியும் | 34 |
| 03. | அமைச்சின் விடயப்பரப்பும், பிரதான விடயப்பரப்புகளும்<br>3.1. அமைச்சின் பிரதான விடயப்பரப்புகள் | 34 |
| 04. | அமைச்சின் நிறுவன ஒழுங்கமைப்பு | 36 |
| 05. | அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | 37 - 38 |
| 06. | அமைச்சின் ஒழுங்கமைப்பு<br>6.1. நிருவாகப் பிரிவு<br>6.2. திட்டமிடல் பிரிவு<br>6.3. வீடமைப்புப் பிரிவு<br>6.4. தொழில்நுட்பப் பிரிவு<br>6.4.1 பொறியியல் சேவைகள் பிரிவு<br>6.4.2 நிர்மாணத் தொழில்நுட்பப் பிரிவு<br>6.4.3 நகரக் குடியிருப்பு அபிவிருத்திப் பிரிவு<br>6.5. தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவு<br>6.6. நிதிப் பிரிவு<br>6.7. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | 40 - 43 |
| 07. | அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்கள்<br>7.1 தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை<br>7.2 நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை<br>7.3 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகார சபை<br>7.4 அரச பொறியியல் கூட்டுத்தாபனம்<br>7.5 கட்டிடத் திணைக்களம்<br>7.6 அரசாங்க தொழில்சாலை<br>7.7 அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம்<br>7.8 நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை<br>7.9 வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம்<br>7.10 ஓசன் வீவ் அபிவிருத்தித் தனியார் கம்பனி | 45 -48 |
| 08. | நிதி ஏற்பாடுகள் | 50 - 51 |
| 09. | ஆண்டுக்கான அமைச்சின் முன்னேற்றம்<br>9.1 நிருவாகப் பிரிவு<br>9.2 திட்டமிடல் பிரிவு<br>9.3 வீடமைப்புப் பிரிவு<br>9.4 தொழில்நுட்பப் பிரிவு<br>9.5 தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவு<br>9.6 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | 52 - 59 |
| 10. | அமைச்சு எதிர்நோக்கிய சவால்கள் | 61 - 63 |

# 01. அறிமுகம்

“நிலையான குடியிருப்பு அபிவிருத்தி மற்றும் நிர்மாணிப்புக் கைத்தொழிலில் புத்தெழுச்சி” என்ற நோக்கின் ஊடாக புதிய அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைய 2015ஆம் ஆண்டில் அமைச்சின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மறுசீரமைக்கப்பட்டன. வீடமைப்பு அபிவிருத்தி என்பது ஒரு நாட்டின் பொதுவான பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டில் சாதகமான பெறுபேறுகளை வெளிப்படுத்தக்கூடிய விசேடமான துறையொன்றாகும். இதற்கான விசேட நிகழ்ச்சித்திட்டங்களையும் உட்கட்டமைப்பு வசதிகள் கருத்திட்டங்களையும் அறிமுகம் செய்ய முடிந்தமை மற்றும் அவற்றை வெற்றிகரமாக இலங்கையில் உள்ள அனைத்து பூகோள பிரதேசங்களையும் உள்ளடக்கும் வகையில் அமுல்படுத்தியதுடன் அவற்றின் வெற்றிகரமான பெறுபேறுகளும் தற்போது கிடைத்து வருகின்றன. குறைந்த வருமானம் பெறுகின்ற சமுதாயத்தினர், நகர்ப்புற பிரதேசங்களில் வாழும் குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புகளில் வாழும் சமுதாயத்தினர், யுத்தத்தினால் இடம்பெயர்ந்தவர்கள் தோட்டப்புற மக்கள் மற்றும் நடுத்தர வகுப்பினர் உள்ளிட்ட சகல இன மக்களையும் இலக்காகக் கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

புதிய அரசாங்கத்தின் 100 நாள் நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைய செமடசெவண எனும் யாவருக்கும் புகலிடம் என்ற வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் தமக்காக நிர்மாணிக்கப்பட்ட வீடொன்று இல்லாத 50,000 குடும்பங்களை இலக்காகக் கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் விசேட பண்பாக இருப்பது மக்களின் பங்கேட்பு அபிவிருத்தியை உண்மையாகவே இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு பெற்றுக்கொள்ள வாய்ப்புக்கிடைத்துள்ளமையாகும். உண்மையில் இந்த நிகழ்ச்சித்திட்டமானது ஒரு வீட்டை நிர்மாணிப்பதுடன் நிறைவடைவது இல்லை என்பதுடன், குறைந்த வருமானம் பெறும் சமுதாயத்தின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டமாகவும் இதனை அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையானது, முன்னைய காலத்தில் நிர்மாணித்துள்ள வீடுகளைக் கொண்ட கிராமங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து அங்குள்ள மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கான புதிய நிகழ்ச்சித்திட்டம் ஒன்றையும் முன்னெடுத்துள்ளது. அவ்வாறே உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு நாடு முழுவதிலும் காணப்பட்ட சாந்து பூசப்படாத வீடுகளின் நிர்மாணப்பணிகளை பூர்த்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டம் ஒன்றையும் அமுல்படுத்தியதுடன் அதன் மூலம் நிரந்தர வருமானம் இல்லாத

குறைந்த வருமானம் பெறும் 25,000 குடும்பங்களுக்கு நன்மை கிடைத்தது.

வீடுகள் இல்லாத குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களுக்கு என வீடுகளைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடன் மற்றொரு புதிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தையும் ஆரம்பிக்க முடிந்தது. அதன்கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் 25 வீடுகள் வீதம் நிர்மாணிக்கின்ற வீடமைப்புக் கருத்திட்டமும் அமுல்படுத்தப்பட்டது.

நடுத்தர வகுப்பினருக்கான 05 இலட்சம் வீடுகளை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றையும் அரசாங்கம் அமுல்படுத்த உத்தெசித்துள்ளதுடன் முதற்கட்டத்தின் கீழ் அரசாங்கம் மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தான பொருத்தமான காணிகளை இதற்கு பயன்படுத்திக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இதன்கீழ் களுத்துறை, கம்பஹா, கண்டி, காலி, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் நடுத்தர வகுப்பினர் கொள்வனவு செய்யும் ஆற்றலைக் கொண்ட வீடுகளை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அவ்வாறே நகரக்குடியிருப்புக்களில் வாழும் மக்களை பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியாக வலுவூட்டுவதை நோக்காகக் கொண்டு சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தி சமுதாயத்தின் திறமைகள், கருத்துக்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சேமிப்பை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் கொழும்பு நகரம் மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் அவர்கள் பொருளாதார அபிவிருத்தியின் வெற்றிகரமான பங்காளர்களாக மாறி பெரும் செயற்பணியொன்றை நிறைவேற்றி வருகின்றனர்.

அத்துடன் நின்றுவிடாது எமது அமைச்சின் நிகழ்ச்சித்திட்டம் வீடமைப்பு அபிவிருத்திக்கு சமாந்தரமாக அரசாங்க வீடுகளில் வசிப்பவர்களுக்கு அறுதி உறுதியை கையளித்தல் மற்றும் 30 வருடங்களுக்கும் மேல் பழைமை வாய்ந்த அரசாங்க வீடமைப்புத்திட்டங்களை புனரமைத்து அதன்மூலம் மக்களின் வாழ்க்கையை பாதுகாத்துக்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் நிர்மாணிப்பு கைத்தொழிலை பிராந்திய மற்றும் பூகோள ரீதியாக போட்டித் தன்மைமிக்கதாக மாற்றியமைத்தல். மற்றும் வினைத்திறனாக்குவதை நோக்காகக் கொண்டு நிர்மாணிப்புக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தை நிறைவேற்றி அதற்கமைய அப்போது காணப்பட்ட நிர்மாணிப்பு பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் நிர்மாணிப்புக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையாக மீளமைக்கப்பட்டுள்ளது. மேற்படி சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளவாறு தேசிய நிர்மாணிப்புக் கொள்கையொன்று தயார்செய்யப்பட வேண்டுமென்பதுடன் அதற்கான வரைவு ஏற்கனவே தயாரிக்கப்பட்டு

அடுத்த கட்ட நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் நிர்மாணிப்புத்துறை முக்கிய செயற்பணியை நிறைவேற்றுவதுடன் நிர்மாணிப்புத் துறையில் இடம்பெறுகின்ற வளர்ச்சிக்கு அமைய ஊழியச்சந்தையும் வளர்ச்சியடைகின்றது. பிராந்திய மற்றும் பூகோள ரீதியாக ஏற்படக்கூடிய போக்குகளுக்கும் உள்நாட்டு ஊழியச்சந்தைக்கு மனிதவளங்களை பூரணமாக பெற்றுக்கொடுப்பதற்கும் உயர்தரம்மிக்க ஊழியப்படையொன்றை உருவாக்குவதற்குமான விசேட பங்களிப்பு நிர்மாணிப்புக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றது.

பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டில் பிரதேச ரீதியான முரண்பாடுகளை குறைப்பதற்கான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தித்துறை மிக முக்கிய இடத்தைப் பெற்றுக்கொள்கின்றது. இதற்காக எமது அமைச்சின் நிர்மாணிப்புத்துறை நிறுவனங்களாக காணப்படுகின்ற அரச பொறியியல் கூட்டுத்தாபனம், அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக்கூட்டுத்தாபனம், கட்டிடத்திணைக்களம், அரசாங்க கைத்தொழில்சாலை மற்றும் கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் ஆகியன பாரிய செயற்பணியொன்றி ஆற்றி வருகின்றன.

இதற்கமைய இலங்கையில் நிலையான அபிவிருத்திச் செயற்பாட்டின் பங்காளர்களாக மாறி 2015 ஆம் ஆண்டில் அமைச்சு மற்றும் அதன்கீழ் இயங்கிவருகின்ற நிறுவனங்கள் பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தியுள்ளதுடன், 2015 ஆம் ஆண்டுக்கான அமைச்சின் செயலாற்றுகை பற்றிய அறிக்கை இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 02. அமைச்சின் நோக்கு மற்றும் செயற்பணி

### நோக்கு

**“நிலையான குடியிருப்பு அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கைத்தொழிலின் புத்தெழுச்சி”**

### செயற்பணி

**“இலங்கைத் தொழில்முயற்சியாளர்கள், தொழில்வாண்மையாளர்கள் மற்றும் ஊழியப் படையணியை ஆற்றல்கள் மற்றும் வளங்கள் மிக்கவர்களாக்கி திட்டமிட்ட சுற்றாடல்களுக்குச் சாதகமான மற்றும் தரமான நிர்மாணிப்புக் கைத்தொழிலை ஏற்படுத்தல் மற்றும் சமுதாயத்தின் பங்கேற்புடன் அடிப்படை வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களை உருவாக்குதவதன் மூலம் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்”**

## 3. அமைச்சின் விடயப்பரப்பு மற்றும் பிரதான விடயப்பரப்புக்கள்

**வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறையின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக கொள்கைகள், அபிவிருத்தித் திட்டங்களைத் தயார் செய்தல் மற்றும் இத்துறையில் ஈடுபட்டுள்ள உரிய நிறுவனங்களுக்கான வழிகாட்டல்களைப் பெற்றுக்கொடுத்தல்**

# 3.1. அமைச்சின் பிரதான விடயப்பரப்புக்கள்

**வீடமைப்புத் துறை**

01. குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் விசேட சமுதாயக் குழுக்கள் உள்ளடங்களாக பொது மக்களின் வீடமைப்புத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான வீடமைப்பு நிதி உதவி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

02. சுற்றாடலுக்கு சாதகமானவாறு செலவினத்திற்கு ஏற்ற பயன்களைப் பெற்றுத்தருகின்ற வீடமைப்பு தொழில்நுட்ப முறைகள் பற்றி கிராமிய மக்களுக்கு வழிகாட்டல்.

03. வீடமைப்பு விடயம் தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயார் செய்தல், பின்னாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

**நிர்மாணத் துறை**

01. நிர்மாண விடயம் தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயார் செய்தல், பின்னாய்வு, மதிப்பீடு செய்தல்.

02. நிர்மாணக் கைத்தொழிலுக்கு ஆலோசனை மற்றும் ஒழுங்குபடுத்தும் சேவைகளை வழங்குதல் மற்றும் கனரக நிர்மாண உபகரணங்களை இயக்குவது மற்றும் பராமரிப்புச் செய்வது பற்றிய பயிற்சி.

03. உரிய சட்டங்கள், விதிகள் மற்றும் நியமங்களுக்கு அமைய நிர்மாணக் கைத்தொழில் துறையின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல், பதிவு செய்தல், முறைப்படுத்தல் மற்றும் தரப்படுத்தல்.

**பொறியியல் துறை**

01. அரச நிறுவனங்களுக்கு இயந்திரப் பொறியியல் சேவைகளை ஆற்றுதல்.

02. அரச உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் மற்றும் ஏனைய கட்டிடங்களுக்கான நியமங்களையும், நியதிகளையும் நிர்ணயித்தல்.


**பொது வசதிகள் துறை**

01. கூட்டாட்சி ஆதனங்களின் முகாமைத்துவம் மற்றும் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள்.

02. பொதுக் கூட்டாட்சி ஆதனங்களை மறுசீரமைப்புச் செய்தல் மற்றும் வினைத்திறனுடனும், துரிதமாகவும் வீடுகளின் உரிமைகளை பொறுப்பளித்தல்.

**வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு**

# 4. அமைச்சின் நிறுவன ஒழுங்கமைப்பு




## 5.அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி

| தொ. இல. | பதவி | சம்பள அளவுத் திட்டம் | ஏற்புடைய சேவை | அங்கீகரிக்கப் பட்ட பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | செயலாளர் | SL 4 | | 01 |
| 02 | மேலதிகச் செயலாளர் (நிருவாகம், நிதி) | SL 3 | இ.நி.சே. விசேட | 01 |
| 03 | மேலதிகச் செயலாளர் (வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி) | SL 3 | இ.நி.சே. விசேட | 01 |
| 04 | மேலதிகச் செயலாளர் (தொழில்நுட்பம்) | SL 3 | இ.பொ.சே. 1 | 01 |
| 05 | பிரதம நிதி அலுவலர் | SL 3 | இ.க.சே. விசேட | 01 |
| 06 | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம் | SL 1 | இ.நி.சே. 1 | 01 |
| 07 | பணிப்பாளர் (வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி) | SL 1 | இ.நி.சே. 1 | 01 |
| 08 | பணிப்பாளர் (நிர்மாணத் தொழில்நுட்பம் | SL 1 | இ.பொ.சே. 1 | 01 |
| 09 | பணிப்பாளர் (திட்டமிடல்) | SL 1 | இ.தி.சே. 1 | 01 |
| 10 | பணிப்பாளர் (பொறியியல் சேவைகள்) | SL 1 | இ.பொ.சே. 1 | 01 |
| 11 | பணிப்பாளர் (USD) | SL 1 | இ.பொ.சே. | 01 |
| 12 | வீடமைப்பு ஆணையாளர் | SL 1 | - | 01 |
| 13 | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி) | SL 1 | இ.நி.சே. 1.11/111 | 02 |
| 14 | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (நிர்மாணத் தொழில்நுட்பம்) | SL 1 | இ.பொ.சே.11/1,11/11 | 01 |
| 15 | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | SL 1 | இ.தி.சே.11/1,11/11 | 01 |
| 16 | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | SL 1 | இ.பொ.சே 11/1,11/11 | 01 |
| 17 | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (பொறியியல் சேவைகள்) | SL 1 | இ.பொ.சே.11/1,11/11 | 01 |
| 18 | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (USD) | SL 1 | இ.பொ.சே.11/111 | 01 |
| | | | இ.பொ.சே.11/11 | 01 |

| | | | | |
|---|---|---|---|---|
| 19 | உதவிச் செயலாளர் (நிருவாகம்) | SL 1 | இ.நி.சே.111 | 02 |
| 20 | கணக்காளர் | SL 1 | இ.க.சே.11/1,11/11 | 02 |
| 21 | பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் | SL 1 | இ.க.சே | 01 |
| 22 | சட்ட அலுவலர் | SL 1 | திணைக்கள | 01 |
| 23 | தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பவியல் அலுவலர் | SL 1 | இ.த.தொ.சே.2/II | 01 |
| 24 | நிருவாக அலுவலர் | MN7 | அ.மு.உ.சே. (சிறப்புத்தரம்) | 01 |
| 25 | செயலாளரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் (தற்காலிகம்) | -- | -- | 01 |
| 26 | மொழிபெயர்ப்பாளர் | MN6 | மொழிபெயர்ப்பாளர் சேவை | 02 |
| 27 | வரவுசெலவுத் திட்ட உதவியாளர் | MN4 | இணைந்த அலுவலர் | 01 |
| 28 | வழங்கல் உதவியாளர் | MN4 | இணைந்த அலுவலர் | 01 |
| 29 | அபிவிருத்தி உதவியாளர் | MN4 | இணைந்த அலுவலர் | 25 |
| 30 | வீடமைப்பு அபிவிருத்தி உதவியாளர் | MN4 | இணைந்த அலுவலர் | 11 |
| 31 | அபிவிருத்தி அலுவலர் | MN4 | இணைந்த அலுவலர் | 19 |
| 32 | முகாமைத்துவ உதவியாளர் | MN4 | அ.மு.உ.சே. | 43 |
| 33 | தொழில்நுட்ப அலுவலர் | MT2 | இ.தொ.சே. | 05 |
| 34 | கனிய அளவையாளர் (QS) | MT2 | இ.தொ.சே | 01 |
| 35 | சாரதி | PL3 | சாரதி சேவை | 22 |
| 36 | அலுவலக சிற்றூழியர் | PL1 | அலுவலக சிற்றூழியர் சேவை | 22 |
| மொத்தப் பதவிகளின் எண்ணிக்கை | | | | **182** |

## 6.அமைச்சின் ஒழுங்கமைப்பு



## 6.1 நிருவாகப் பிரிவு

“வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சினால் அரசாங்கக் கொள்கைகளை அமுல்படுத்தும் போதும் பொது நலன்புரிக்காக மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு பணிகளின் போதும் அமைச்சின் சகல பிரிவுகளுக்கும் ஒத்துழைப்பினை வழங்கி அதற்குத் தேவையான வேலைச் சூழலை ஒழுங்குசெய்து கொடுத்தல் மனித வள மற்றும் பௌதீக வளங்களை வினைத்திறனுடனும் உற்பத்தித் திறனுடனும் முகாமைத்துவம் செய்வது நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது”

### நிருவாக பிரிவின் பிரதான பணிகள்

1. அமைச்சில் சேவையாற்றுகின்ற சகல அலுவலர்களினதும் தாபான நடவடிக்கைகளை பேணி வருதல்.
2. அமைச்சின் சகல பராமரிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.
3. அமைச்சின் வழங்கல் நடவடிக்கைகளை நிறைவேற்றல்.
4. அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் அமைச்சின் தலையீட்டின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற சகல நிருவாக நடவடிக்கைகளும்
5. அமைச்சின் பதவியணி சம்பந்தமான நடவடிக்கைகள்.
6. அமைச்சின் சகல பிரிவுகளுக்கும் தேவையான வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.
7. அமைச்சின் இணையத்தளத்தை இற்றைப்படுத்தல்.
8. உற்பத்தித் திறன் செயற்பாடுகளை நடாத்தல்.
9. அமைச்சின் நடவடிக்கைகளுக்கான போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.
10. அமைச்சின் அலுவலர்களுக்கான பயிற்சித் தொடர்களை நடாத்தல்.

## 6.2 திட்டமிடல் பிரிவு

“அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடப்பட்டவாறு முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கு நிறுவனங்களை வழிநடாத்த உதவுதல்”

“வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறையில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றிய சரியான தகவல்களைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் உரிய தரப்பினர்கள் மற்றும் பொதுமக்களை அறிவுறுத்தல்”

“வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறையின் அபிவிருத்தித் தேவைகளை இனங்கண்டு நிறுவனங்களினால் தயார் செய்யப்படுகின்ற கருத்திட்டப் பிரேரணைகளை நிதி அமைச்சினூடாக அங்கீகரித்துக்கொள்ள உதவுவதும் திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.”

### திட்டமிடல் பிரிவின் பிரதான பணிகள்

1. அமைச்சின் நோக்கு மற்றும் நோக்கங்களுக்கு ஏற்புடையதாக அமைச்சு மற்றும் அதன் கீழ் இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் செயல் ரீதியான திட்டத்தைத் தயார் செய்வதற்கான உரிய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்.
2. அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றத்தை மாதாந்த மற்றும் வருடாந்த செயற்திட்டத்திற்கமைய மதிப்பீடு செய்தல்.
3. வரவு செலவுத்திட்ட விவாத குழுநிலைக்கு அமைச்சின் செயலாற்றுகை அறிக்கையைத் தயார் செய்து பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

4. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் சம்பந்தமான தகவல்களைத் தயார் செய்வதும் அறிக்கையிடுவதும்.

5. அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்துள்ள கருத்திட்டப் பிரேரணைகளை தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமா்ப்பிப்பதும், ஒருங்கிணைப்புச் செய்வதும்.

## 6.3 வீடமைப்புப் பிரிவு

“வீடமைப்புத் துறையின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் பொதுவசதிகள் ஆகிய விசேட துறைகளின் கீழ் தேசிய திட்டங்களை திட்டமிடல், திட்டங்களைத் தயாா் செய்தல், வழிநடாத்தல், பின்னாய்வு, மற்றும் அத்துறையில் ஈடுபட்டுள்ள அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு வழிகாட்டல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.”

### வீடமைப்புப் பிரிவின் பிரதான பணிகள்

**1. கொள்கைகளை வகுத்தல்**

- வீடமைப்புத் துறையின் முன்னேற்றத்துக்குத் தேவையான கொள்கைகளைத் தயாா் செய்தல்.
- வீடமைப்புத் துறைக்கு ஏற்புடையதான கொள்கைகளை ஏனைய அரசதுறை நிறுவனங்களுடன் இணைந்து அமுல்படுத்தல்.
- குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் சமுதாய அபிவிருத்தி.
- மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய வீடமைப்புக் குழுக்களைத் தாபித்தல்.
- உலகக் குடியிருப்புத் தினத்தை முன்னிட்டு நாடு முழுவதிலும் வீடமைப்பு, நிர்மாணிப்பு சம்பந்தமான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதும், உலகக் குடியிருப்புத் தினத்தைக் கொண்டாடுவதும்.

**2. காணிகள் பற்றிய கடமைகள்**

- வீடமைப்பு அபிவிருத்தி நோக்கங்களுக்கு காணிகளைச் சுவீகரித்தல்/ பொறுப்பேற்றுக் கொள்வது சம்பந்தமான நடவடிக்கைகள்.
- வீடமைப்பு நோக்கங்களுக்கு காணிகளை நீக்குவது சம்பந்தமான நடவடிக்கைகள்
- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 8(1) பிரிவின் கீழ் காணிகள்/ வீடுகளுக்கான சட்ட ரீதியான உரித்தினை பொதுமக்களுக்கு நீக்குதல்.
- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குரித்தான காணிகளில் சட்ட விரோதமாக வீடுகளை நிர்மாணித்து வசித்துள்ள வசிப்பாளா்களை அமைச்சரவை அங்கீகாரத்திற்கமைய ஒழுங்குபடுத்தல்.

**3. வீடமைப்பு அபிவிருத்தி**

- நாட்டின் வீடமைப்புத் தேவைக்குப் பொருத்தமானவாறு வீடமைப்பு நிர்மாணிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வீடமைப்புக் கருத்திட்டங்களை அமுல்படுத்தல்.
- தொடா்மாடி வீடமைப்புத் திட்டங்களை மறுசீரமைத்தல்.
- வீடமைப்புக் கடன் உதவி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- வீடமைப்புத் திட்டங்கள் சம்பந்தமான அமைச்சரவை விஞ்ஞாபனங்களைச் சமா்ப்பித்தல்.

- வேறு அரச நிறுவனங்களுடன் இணைந்து வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் வீடமைப்புக் கருத்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல்.
- குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் சமுதாய அபிவிருத்தி.

## 6.4 தொழில்நுட்பப் பிரிவு

### 6.4.1 பொறியியல் சேவைகள் பிரிவு

"நிர்மாணிப்புக் கருத்திட்டங்களுக்கு நியாயமான மற்றும் தாங்கிக்கொள்ளக் கூடிய விலைகளை நிர்ணயிப்பதன் மூலம் ஒட்டுமொத்த நிர்மாணிப்புக் கைத்தொழிலின் மொத்த நிர்மாணிப்புச் செலவினத்தைக் கட்டுப்படுத்துவது மற்றும் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் நிர்மாணக் கருத்திட்டங்களுக்கு வெளிப்படைத் தன்மையைக் கொண்ட நியாயமான விலைகளுக்கமைய ஒப்பந்ததாரர்களைத் தேர்ந்தெடுக்க உதவுவதும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன."

#### பொறியியல் சேவைகள் பிரிவின் பிரதான பணிகள்

1. அரசாங்க நிறுவனங்களின் நிர்மாணிப்பு சம்பந்தமான நிலையான தொழில்நுட்பக் குழுவின் அங்கீகாரங்களைப் பெற்றுக் கொடுத்தல்.
2. அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களில் வழங்கல் குழுக்களை நியமனம் செய்தல்.
3. ஒப்பந்த வித்தியாசங்களுக்கு அமைச்சின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுத்தல்.
4. அமைச்சின் வழங்கல் குழுவின் தீர்மானங்களைப் பெற்றுக்கொடுத்தல்.
5. ஒப்பந்ததாரர்கள் சம்பந்தமான நிர்மாணிப்புத் துறைக்குரிய தரவுக் கட்டமைப்பு மற்றும் நிர்மாணிப்புத் துறை சம்பந்தமான விலைகள் பற்றிய தரவுக்கட்டமைப்பைப் பேணிவரல்.

### 6.4.2 நிர்மாணத் தொழில்நுட்பப் பிரிவு

"சுற்றாடலுக்குச் சாதகமான, தரமான நிர்மாணிப்புக் கைத்தொழிலை ஏற்படுத்துவதற்கு அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களை வழிநடாத்துவது இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது."

#### நிர்மாணத் தொழில்நுட்பப் பிரிவின் பிரதான பணிகள்

1. நிர்மாணிப்புத் துறையுடன் இணைந்துள்ள நிர்மாணிப்பு மற்றும் பொறியியல் சேவைகளை வழங்கும் நிறுவனங்களை நிர்மாணிப்புக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக வழிநடாத்தல்.
2. நிர்மாணத் துறைக்குத் தேவையான ஊழியப் படையைத் தயார் செய்தல்.
3. தொழில் வல்லுனர்கள், நிர்மாணிப்புக் கலைஞர்களை திறமையும் அறிவும் மிக்கவர்களாக்குதல் மற்றும் தரமான நிர்மாணிப்புகளை மேற்கொள்வதற்காக அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களை வழிநடாத்தல்.

### 6.4.3 நகரக் குடியிருப்பு அபிவிருத்திப் பிரிவு

"பிரதானமாக நகர்ப் பிரதேசங்களில் வாழும் குறைந்த வருமானம் பெறுகின்ற மக்கள் மற்றும் ஏனைய மக்களுக்குத் தேவையானவாறு வசிப்பதற்கு ஆற்றல் உள்ள வசதிகளைக் கொண்ட வீடமைப்புக் கருத்திட்டங்களை நிர்மாணிப்பதை வழிநடாத்தல் மற்றும் நகரக் குடியிருப்பு அபிவிருத்தியானது இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது."

#### நகரக் குடியிருப்பு அபிவிருத்திப் பிரிவின் பிரதான பணிகள்

1. அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அபிவிருத்திப் பிரேரணைகளை அமைச்சின் நிலையான கருத்திட்ட மதிப்பீட்டுக் குழுவின் ஊடாக தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பித்தல்.

2. நகரக் குடியிருப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களை கண்காணிப்புச் செய்தல் மற்றும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.

### 6.5 தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவு

இந்தப் பிரிவு 1973 இன் 01 ஆம் இலக்க வீடமைப்பு ஆதன உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றுகின்றது. அவ்வாறே, 1972 இன் 7 ஆம் இலக்க வாடகைச் சட்டத்தின் கீழ் பொறுப்பளிக்கப்பட்டுள்ள சில பணிகளையும் நிறைவேற்றி வருகின்றது.

"மேலே குறிப்பிடப்பட்ட சட்டங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள பிரதான நோக்கங்களான வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு உறுதிகளைப் பெற்றுக்கொடுத்தல், அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட வீடுகளின் உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்குதல் போன்ற நோக்கங்களுக்காக இந்தப்பிரிவு செயற்பட்டுவருகிறது.

### 6.6 நிதிப் பிரிவு

"அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள ஏனைய நிறுவனங்களுக்கு ஏற்புடையதாகின்ற நோக்கங்களை அடைந்துகொள்ளத் தேவையான நிதி வளம் மற்றும் ஆலோசனையைப் பெற்றுக்கொடுத்தல், மேற்படி வளங்களைப் பயன்மிக்கவாறும், வினைத்திறனுடனும் பயன்படுத்துவதற்குத் தேவையான கட்டமைப்பு மற்றும் நிருவாக முறைகள் பற்றி ஆலோசனை வழங்குதல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது."

#### நிதிப் பிரிவின் பிரதான பணிகள்

1. நிதி பற்றித் திட்டமிடல்.
2. வரவுசெலவுத் திட்டமிடல்
3. நிதியைப் போதியளவிற்கு உரிய நேரத்திற்குப் பெற்றுக்கொள்ளல்.
4. அமைச்சின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நிதி வழங்குதல் மற்றும் செலவிடல்.
5. சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு செலவினம் மற்றும் நிதி முன்னேற்றம் பற்றி உரிய திகதிகளுக்கு அல்லது அதற்கு முன்னர் அறிக்கையிடல்.

### 6.7 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

"நிறுவனங்களின் உத்தேச நோக்கங்களை யதார்த்தங்களாக மாற்றியமைத்துக் கொள்வதற்காக சிறந்த நிதி நிருவாகம் மற்றும் முறையான முகாமைத்துவத்தை தாபித்தல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது."

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் நிதி நிருவாகம் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளில் பங்கேற்று அந்த நடவடிக்கைகளை மென்மேலும் முறையாகவும் வினைத்திறனுடனும் மேற்கொள்வதற்காக முகாமைத்துவத்திற்கு வழிகாட்டுதல் மற்றும் தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுத்து உதவுதல் இப்பிரிவின் பிரதான பணிகளாகும்.

# 2016 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட சில அபிவிருத்திக் கருத்திட்டங்கள்



யாவருக்கும் புகலிடம் கடன் திட்டத்தின் கீழ் பொலன்னறுவை மாவட்டத்தில் கடன் வழங்கப்பட்டமை



யாவருக்கும் புகலிடம் கடன் மற்றும் மேசன் வேலை உபகரணம் கையளித்தல்



பொலன்னறுவை கலஹுகல வீடமைப்புக் கருத்திட்டம்



ஹம்பாந்தோட்டை மாவட்ட சஹனகம மாதிரிக் கிராமத்தின் நிர்மாணப் பயிகள்




சீமேந்து உதவி வழங்கல் - குருநாகல் மாவட்டம்



சீமேந்து உதவி வழங்கல் - அநுராதபுரம் மாவட்டம்

# 7. அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள்

## 7.1 தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையானது 1979 இன் 17 ஆம் இலக்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரச் சபைச் சட்டத்தின் மூலம் இலங்கையில் வீடமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தாபிக்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரசபை அதன் கொழும்பில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்திற்கு மேலதிகமாக 25 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 2 நகர அலுவலகங்களைக் கொண்டுள்ளதுடன் நாடு முழுவதும் வீடமைப்பு மற்றும் வீடமைப்பு அபிவிருத்தித் துறையில் தனது நடவடிக்கைகளை அமுல்படுத்தி வருகின்றது.

## 7.2 நகர குடியிருப்பு அதிகாரசபை

2008 இன் 36 ஆம் இலக்க நகரக் குடியிருப்பு அதிகார சபைச் சட்டத்திற்கமைய இந்த அதிகார சபை நிலையான நகர குடியிருப்பு அபிவிருத்தியை ஏற்படுத்துவதை உறுதிசெய்யும் பொருட்டு தற்போது காண்பபடுகின்ற வீட்டு அலகுகளை மேம்படுத்துவதன் மூலம் அல்லது சிறந்த நல்ல வீடமைப்பு வசதிகள் மற்றும் ஆகக் குறைந்த வசதிகளுக்கான பிரவேசத்தை செய்துகொடுப்பதன் மூலம் சேவை வசதிகள் குறைவான நகரக் குடியிருப்புகளில் வசிக்கும் ஆட்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு செயற்பட்டு வருகின்றது.

## 7.3 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

2003 இன் 24 ஆம் இலக்க பொதுவசதிகள் சபை (திருத்தச்) சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை கூட்டாட்சி நிர்மாணிப்புகள் மற்றும் முகாமைத்துவம் சம்பந்தமான ஒழுங்குறுத்தல் அதிகாரசபையாகும். மேலும் 1982 இன் 45 ஆம் இலக்க, 2003 இன் 39 ஆம் இலக்கச் சட்டங்கள் மூலம் திருத்தியமைக்கப்பட்ட இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் நியமங்களை ஒழுங்குறுத்துவது இந்த அதிகாரசபை தாபிக்கப்பட்டதன் முக்கிய நோக்கமாகும்.

## 7.4 அரச பொறியியல் கூட்டுத்தாபனம்

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் பேணி வருகின்ற பகுதியளவான அரச நிறுவனமொன்றான இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் 1962 ஜனவரி 01 ஆம் திகதிய 12841 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தாபிக்கப்பட்ட நிறுவனமாகும்.

அரச பொறியியல் கூட்டுத்தாபனமானது நிர்மாணிப்புத் துறையின் அரச துறையைச் சேர்ந்த முன்னோடி நிறுவனமாகும். இதன் மூலம் பொறியியல் சேவையை வழங்குதல், ஆலோசனைச் சேவைகளை வழங்குதல், நிர்மாணிப்பு இயந்திர சாதனங்களை

வழங்குதல், திட்டங்களை வடிவமைத்தல், பயிற்சியளித்தல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் போன்றன நிறைவேற்றப்படுகின்றன.

அவ்வாறே, இக்கூட்டுத்தாபனம் 2009 ஆம் ஆண்டு முதல் ISO 9001:2000 தரச்சான்றிதழை பெற்றுக் கொண்டுள்ளதுடன் அண்மைக் காலத்தில் ISO 14001:2004 சுற்றாடல் முகாமைத்துவச் சான்றிதழையும் பெற்று போட்டித்தன்மையுடன் அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற நிர்மாணிப்புத்துறைசார் நிறுவனமாகும்.

## 7.5 கட்டிடங்கள் திணைக்களம்

ஆரம்பத்தில் அரசாங்க வேலைகள் திணைக்களத்தின் ஒரு பகுதியாகக் காணப்பட்டதுடன் 1969 இல் "ஏ" தரத்தைச் சேர்ந்த திணைக்களமொன்றாக கட்டிடத் திணைக்களம் தாபிக்கப்பட்டது. அப்போதைய சகல அரச கட்டிடங்கள் மற்றும் அது சம்பந்தமான சேவைகளினதும் நிர்மாணிப்பு நடவடிக்கைகள், பராமரிப்பு நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகள் கட்டிடத் திணைக்களத்திற்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன். மேற்படி சகல நடவடிக்கைகளும் கட்டிடத் திணைக்களத்தின் மாவட்ட பொறியியல் அலுவலகங்கள் 27 இன் ஊடாக 598 இற்கும் மேற்பட்ட நிரந்தர ஊழியர்களைப் பயன்படுத்தி நிறைவேற்றப்பட்டன.

1989 இல் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டதையடுத்து கட்டிடத் திணைக்களம் கொழும்பில் அமைந்துள்ள தலைமையகம் மற்றும் நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் தாபிக்கப்பட்ட பிரதான 7 பொறியியல் அலுவலகங்களை உள்ளடக்கியதாக மீளமைக்கப்பட்டது.

## 7.6.அரசாங்க தொழிற்சாலை

அரசாங்கத் தொழிற்சாலை மூலம் அரசாங்க நிறுவனங்களுக்கு இயந்திர, பொறியியல் துறையில் உலோக மற்றும் தளபாடங்கள் சம்பந்தமான வேலைகள், பொருட்கள், சேவைகளை ஆற்றும் பணிகள் மற்றும் இயந்திரப் பொறியியல் துறையின் வேலைத்தளப் பயிற்சியளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 7.7 அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம்

அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம் 1957 இன் 49 ஆம் இலக்க அரசாங்கக் கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் 1971 ஒக்டோபர் 01 ஆம் திகதி பொறியியல் நிறுவனமொன்றாகத் தாபிக்கப்பட்டதுடன் தற்போது வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் இயங்கிவருகின்றது.

இந்தக் கூட்டுத்தாபனம் பிரதான பொறியியல் நிறுவனம் என்ற வகையில் பாலங்கள், பெருந்தெருக்கள், கட்டிடங்கள், சுரங்கப் பாதைகள், நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழங்கல் திட்டங்கள் போன்றவற்றைத் திட்டமிடுதல், வடிவமைத்தல் மற்றும் நிர்மாணிப்பதன் மூலம் இந்த நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்கு

பெரும் பங்களிப்பினை வழங்கி வருவதுடன் பாலங்களை நிர்மாணித்தல் தொடர்பில் இலங்கையிலுள்ள முக்கிய நிறுவனமாகவுள்ளது. அவ்வாறே சுரங்கப் பாதைகளை நிர்மாணிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ள ஒரே இலங்கை நிறுவனமும் இந்தக் கூட்டுத்தாபனமாகும்.

நிர்மாணப் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சகபயினால் இந்தக் கூட்டுத்தாபனத்திற்கு C1 தரத்தைச் சேர்ந்த நிர்மாணிப்பு நிறுவனமாக பதிவு வழங்கப்பட்டுள்ளதுடன் மேற்படி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நிர்மாணிப்புச் செயலாற்றுகை பற்றிய விருதையும் இக்கூட்டுத்தாபனம் பெற்றுள்ளது.
ISO 9001:2008 தரச்சான்றிதழை பெற்றுக் கொண்டுள்ள இக்கூட்டுத்தாபனம் நிர்மாணிப்புகளை உரிய தரநியமங்களுக்கு அமைய மேற்கொண்டு வருகின்றது.
இக்கூட்டுத்தாபனம் பொறியியல் பணிகளுக்குத் தேவையான முன் வலுவூட்டப்பட்ட முன்பூர்த்தி செய்யப்பட்ட கொன்க்றீட் பாலங்கள், மின் கம்பங்கள், ஏனைய முன்பூர்த்தி செய்யப்பட்ட அம்சங்ககளயும் உற்பத்தி செய்கின்றது. அத்துடன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சகல வீதி சமிஞ்சைக் கட்டமைப்புக்களையும் பராமரித்தல் மற்றும் புதிய கட்டமைப்புக்களை உருவாக்கும் பணிகளையும் கூட்டுத்தாபனம் மேற்கொண்டு வருகின்றது.

## 7.8 நிர்மானக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை

நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் 2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையாக மாற்றியமைக்கப்பட்டது. நிர்மாணக் கைத்தொழில் துறையின் நடவடிக்கைகளை ஒழுங்குறுத்தல், பதிவுசெய்தல், முறைப்படுத்தல் மற்றும் தரப்படுத்துவது இந்தச் சட்டத்தின் பிரதான நோக்கங்களாகும்.
இந்த சட்டத்தின் கீழ் நிர்மாணக் கைத்தொழிலுக்கு தேசிய சபையொன்றைத் தாபிப்பதற்கும், நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி நிதியத்தைத் தாபிப்பதற்கும், நிர்மாணக் கைத்தொழில் சம்பந்தமான தொழில் வல்லுநர்கள், உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் கலைஞர்களின் அபிவிருத்தி மற்றும் நலன்புரிக்கான ஏற்பாடுகளைச் செற்வதற்கும் நிர்மாண நடவடிக்கைகள் சம்பந்தமான பிணக்குகளைத் தீர்த்துவைத்தல் மற்றும் இலங்கையில் நிர்மாணக் கைத்தொழில் துறையில் மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்குமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
இந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்கள் மற்றும் பணிகள் தற்போது நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் அமுல்படுத்தப்படுகின்றன.

## 7.9 வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம்

1970 இன் 33 ஆம் இலக்க இலங்கை அரச வர்த்தகக் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் கீழ் கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் 1971 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. இதனையடுத்து 1987 இன் 23 ஆம் இலக்க அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசாங்கத்திற்கு உரித்தான வர்த்தக நிறுவனங்களை பொதுக் கம்பனிகளாக மாற்றியமைக்கும் சட்டத்தின் கீழ் 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கம்பனிகள் சட்டத்தினால் வரையறுக்கப்பட்ட பொறுப்புகளைக் கொண்டு பொதுக் கம்பனியாக இந்தக் கூட்டுத்தாபனம் மாற்றியமைக்கப்பட்டது.

வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் துறைகளுக்குத் தேவையான தரமான கட்டிடப் பொருட்கள் மற்றும் நிர்மாணிப்பு உபகரணங்களை போட்டித்தன்மைமிக்க விலையில் நாடு முழுவதிலும் வழங்குகின்ற முன்னோடி அரச நிறுவனம் என்ற வகையில் சமூகப் பொறுப்பை நிறைவேற்றி இலங்கைச் சமுதாயத்தில் உச்சளவான நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் வகையில் வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் தமது நடவடிக்கைகளை வழிநடாத்திவருகின்றது.

## 7.10 ஓஷன் வீவ் அபிவிருத்தி தனியார் கம்பனி

1996 ஜனவரி 01 ஆம் திகதி ஓஷன் வீவ் தனியார் கம்பனி ஆரம்பிக்கப்பட்டது.

“ஜனசெவண” 10 இலட்சம் வீடமைக்கும் தேசிய கொள்கைக்கு பலம் சேர்க்கும் அரச நிறுவனம் என்றவகையில் நம்பிக்கையும் பொறுப்பும்மிக்க தனியார் நிறுவனமொன்றாக வினைத்திறனை மையமாகக் கொண்டு இந்தக் கம்பனி வீடமைப்புச் சந்தையில் தெளிவான மாற்றமொன்றை ஏற்படுத்தி வீடமைப்புத் தேவைகளைப் பூர்த்திசெய்து கொடுக்க செயற்பட்டு வருகின்றது.

# 2015 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட சில அபிவிருத்திக் கருத்திட்டங்கள்



சஹஸ்புரு தொடர்மாடி வீடமைப்புத்திட்டத்தை புனரமைக்கும் கருத்திட்டம்



அத்துருகிரிய நெடுஞ்சாலையின் பரிமாற்று நிலையம்




ஹில்டா வீடமைப்புத்திட்டத்தை புனரமைத்தல்



ஆலோகபுர வீடமைப்புத்திட்டத்தை புனரமைத்தல்




நிர்மாண இயந்திரசாதன கலைஞர்களை பயிற்றுவித்தல் - OTC கல்குளம்



ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல்

# 8. நிதி ஏற்பாடுகள்

2016 ஆம் ஆண்டு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட ஒட்டுமொத்த நிதி ஏற்பாடுகள் மற்றும் மேற்படி நிதி ஏற்பாடுகளின் 2016.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றம் பின்வருமாறு.

## ❖ அமைச்சின் ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம்

| | மதிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடு | தேறிய (மொத்த) ஏற்பாடு | உண்மைச் செலவினம் |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 638,960,000 | 643,190,000 | 628,675,474 |
| மூலதனச் செலவினம் | 4,385,690,000 | 5,716,690,000 | 5,691,112,092 |
| | **5,024,650,000** | **6,359,880,000** | **6,319,787,566** |
| | | | |

## ❖ நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அமைய

நிகழ்ச்சித்திட்டம் 1 – செயற்பாட்டு நடவடிக்கைகள்

| | மதிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடு | தேறிய (மொத்த) ஏற்பாடு | உண்மைச் செலவினம் |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 538,460,000 | 537,460,000 | 522,945,474 |
| மூலதனச் செலவினம் | 14,400,000 | 15,400,000 | 12,638,466 |
| | **552,860,000** | **552,860,000** | **535,583,940** |
| | | | |

நிகழ்ச்சித்திட்டம் 2 – அபிவிருத்தி நடவடிக்கைகள்

| | மதிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடு | தேறிய (மொத்த) ஏற்பாடு | உண்மைச் செலவினம் |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 100,500,000 | 105,730,000 | 105,730,000 |
| மூலதனச் செலவினம் | 4,371,290,000 | 5,701,290,000 | 5,677,899,526 |
| | **4,471,790,000** | **5,807,020,000** | **5,783,629,526** |
| | | | |

# அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கு

| | | | | |
|---|---|---|---|---|
| **விடய இல.** | 123011<br>123012 | | | |
| | | உச்ச செலவின வரையறை ரூ. | பெறுகைகளின் ஆகக் குறைந்த வரையறை ரூ. | வரவு நிலுவையின் உச்ச வரையறை ரூ. |
| **அங்கீகரிக்கப்பட்ட வரையறைகள்** | | 15,000,000 | 7,000,000 | 50,000,000 |
| | | | | |
| **ஆண்டின் ஆரம்ப மீதி (2015.01.01)** | | | 23,645,514 | |
| **ஆண்டினுள் மொத்த வரவு வைக்கப்பட்டவை** | | | | |
| | 123011 | 7,690,540 | | |
| | 123012 | 16,429,120 | 24,119,660 | |
| | | | | |
| | | | 47,765,174 | |
| **ஆண்டினுள் மொத்த செலவு வைக்கப்பட்டவை** | | | | |
| | 123011 | 8,394,882 | | |
| | 123012 | 16,982,978 | (25,377,860) | |
| **ஆண்டின் இறுதி மீதி (2015.12.31)** | | | 22,387,314 | |

# 9. அமைச்சின் ஆண்டுக்குரிய முன்னேற்றம்

## 9.1. நிருவாகப் பிரிவு

### ❖ அமைச்சின் பதவியணி

2015 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சாக காணப்பட்ட இந்த அமைச்சு வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சாக மீளமைக்கப்பட்டதை அடுத்து, அப்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டு சேவையாற்றிவந்த கிராமிய அபிவிருத்தி மற்றும் வாழ்வெழுச்சி ஆகிய பிரிவுகளுக்கு உரித்தான பதவி நிலை அலுவலர்கள் 42 பேர் உள்ளடங்களாக அலுவலர்கள் 88 பேரைக் கொண்ட பதவியணி அமைச்சின் நிருவாகப் பிரிவின் கீழ் கொண்டுவரப்பட்டனர். அதற்கமைய அமைச்சின் ஒட்டுமொத்த பதவியணி அலுவலர்களின் எண்ணிக்கை 246 ஆக அதிகரித்தது.

இதன் போது நிருவாகப் பிரிவில் காணப்பட்ட மனிதவள மற்றும் பௌதீக வளங்களை நல்லமுறையில் முகாமைத்துவம் செய்து மேற்படி பதவியணியின் சுயவிபரக் கோப்புக்கள், கடமைசார் பதவி உயர்வுகள், இடமாற்றங்கள், ஓய்வுறுத்தல்கள் மற்றும் வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளை நடாத்தல் போன்ற சகல நடவடிக்கைகளும் நிருவாகப் பிரிவினால் எவ்வித தாமதமும் இன்றி நடாத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டு மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் சேவையாற்றி வந்த உதவிப் பணிப்பாளர்கள், அபிவிருத்தி உதவியாளர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள் சுமார் 20000 பேர் இந்த அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டார்கள் என்பதுடன், மேற்படி அலுவலர்கள் சம்பந்தமான சகல நிருவாகப் பொறுப்புக்களும் இந்த அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டன. குறித்த அலுவலர்களின் நிருவாக நடவடிக்கைகள் அனைத்தும் அப்போது காணப்பட்ட மனிதவளங்களைப் பயன்படுத்தி கடும் அர்ப்பணிப்புக்களுக்கு மத்தியில் நிருவாகப் பிரிவினால் முறையாக மேற்கொள்ளப்பட்டன.

2015 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலை அடுத்து மீண்டுமொரு முறை இந்த அமைச்சு வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு என மீளமைக்கப்பட்டதுடன், சமுர்த்தி விடயம் நீக்கப்பட்டதை அடுத்து, 2015 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்ட அலுவலர்கள் 88 பேர் சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டார்கள் என்பதுடன், இதன் காரணமாக அமைச்சின் பதவியணியினர் ஆண்டின் இறுதியில் 162 ஆகக் குறைவடைந்தது.

### * அமைச்சின் பதவியணி வெற்றிடங்கள்

அமைச்சின் பதவிநிலை தரத்தைச் சேர்ந்த பதவிகளாகக் கருதப்படுகின்ற மேலதிகச் செயலாளர் (வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி), தேசிய வீடமைப்பு ஆணையாளர், உதவிப் பணிப்பாளர் (வீடமைப்பு) ஆகிய பதவிகள் 2015 ஆம் ஆண்டு வெற்றிடமானதுடன், மேற்படி வெற்றிடங்களை 2015 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்துகொள்ளும் ஆற்றல் கிடைத்தது. மேலும் 2014 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாகக் காணப்பட்ட உதவிப் பணிப்பாளர் (நகரக் குடியிருப்பு அபிவிருத்தி) மற்றும் மொழிபெயர்ப்பாளர் பதவிகளையும் 2015 ஆம் ஆண்டில் அமைச்சினால் பூர்த்தி செய்து கொள்ள முடிந்தது.

எவ்வாறாயினும் வெற்றிடமாகக் காணப்பட்ட பிரதம நிதி அலுவலர் பதவி இலங்கை கணக்காளர் சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த அலுவலர்களின் பற்றாக்குறை காரணமாகவும், கனிய அளவையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் ஒழுங்குவிதியின் தகைமைகளை திருத்தியமைப்பதற்காக மீண்டும் அனுப்பியதனாலும் பூர்த்தி செய்துகொள்ள முடியவில்லை என்பதுடன், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அலுவலர்

பதவியின் வெற்றிடத்தையும் பூர்த்தி செய்ய முடியவில்லை.

மேலும் இரண்டாம் மற்றும் ஆரம்ப தரங்களைச் சேர்ந்த அலுவலர்கள் உயிரிழந்தமை, இடமாற்றம் பெற்றமை, ஓய்வு பெற்றமை காரணமாக 07 பதவிகள் வெற்றிடமாகின. இதற்கமைய 2015 ஆம் ஆண்டின் இறுதியில் அமைச்சில் காணப்பட்ட ஒட்டுமொத்த பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை 24 ஆகும்.

* **அமைச்சரவை விஞ்ஞாபனங்களும் பாராளுமன்ற வினாக்களும்**

வீடமைப்பு, சமுர்த்தி மற்றும் நிர்மாணத்துறை ஆகிய விடயப்பரப்பிற்கு உரித்தான அமைச்சின் கீழ் இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் பிரதான விடயப்பரப்புகள் மற்றும் நிருவாக நடவடிக்கைகள் சம்பந்தமாக 2015 ஆம் ஆண்டில் இந்த அமைச்சினால் 51 அமைச்சரவை விஞ்ஞாபனங்களும் அமைச்சரவைக் குறிப்புகள் 14 உம் சமர்ப்பிக்கப்படுள்ளதுடன் 12 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தொடர்பில் அவதானிப்புக்களைப் பெற்றுக் கொடுக்கவும் அமைச்சு செயற்பட்டுள்ளது.

மேலும் அமைச்சின் விடயப்பரப்புக்கு உரித்தானதாக 2015 ஆம் ஆண்டில் கேட்கப்பட்டிருந்த 26 பாராளுமன்ற வினாக்களுக்கும் பதில் அளிக்கவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

* **பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு பதில் நடவடிக்கை மேற்கொள்ளுதல்**

இந்த அமைச்சின் விடயப்பரப்புக்கு அமைய பிரதானமாக பொதுமக்களின் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவது வீடமைப்புத்துறை தொடர்பிலாகும் என்பதுடன் ஊழியர்களின் நிறுவன ரீதியான சிக்கல்கள் மற்றும் தொழில் சங்க சிக்கல்கள் தொடர்பான முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களும் உள்ளன. குறிப்பாக சனாதிபதி அலுவலகம், பிரதம அமைச்சர் அலுவலகம் மற்றும் பொது மனுக் குழு ஊடாக மற்றும் ஒம்புட்சுமன் ஊடாகவும் மேற்படி கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

இவ் அனைத்துக் கோரிக்கைகள் தொடர்பிலும் தலையீடு செய்து நடவடிக்கை மேற்கொள்வதற்கு அமைச்சு தாமதிக்காது செயற்பட்டுள்ளதுடன், அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்கள் மற்றும் தொழிற் சங்கங்கள் பற்றிய சிக்கல்கள் தொடர்பில் அமைச்சின் தலைமையில் உரிய நிறுவனத் தலைவர்களுடன் கலந்துரையாடி தீர்வுகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

* **பயிற்சி மற்றும் உற்பத்தித் திறன் செயற்பாடுகள்**

அமைச்சினால் பொது நிருவாக, கணக்கு நடவடிக்கைகள், தாபன நடவடிக்கைகள், உற்பத்தித்திறன் செயற்பாடுகள், ஆளுமை அபிவிருத்தி மற்றும் திறன் விருத்தி போன்ற இனங்காணப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பதவி நிலை அலுவலர்கள் உள்ளடங்களாக பல்வேறு அலுவலர் தொகுதிகளையும் உள்ளடக்கும் வகையில் அலுவலர்கள் பங்கேட்கச் செய்யப்பட்டுள்ளார்கள் என்பதுடன் அமைச்சின் ஒட்டுமொத்த பதவியணிக்கும் மனப்பாங்கு அபிவிருத்திச் செயலமர்வுகள் இரண்டை 2015 ஆம் ஆண்டு நடாத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேலும் அரச மற்றும் இணை நிறுவனங்களில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பாடநெறிகளை கற்கின்ற பயிலுனர்கள் 15 பேருக்கு செயன்முறைப் பயிற்சிகளைப் பெற்றுக் கொடுக்கவும் 2015 ஆம் ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

## 9.2 திட்டமிடல் பிரிவு

* **வருடாந்த செயற்றிட்டம் மற்றும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்**

ஒவ்வொரு வருடமும் அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் சம்பந்தமான செயற்பாடுகளையும் மதிப்பீடுகளையும் உள்ளடக்கியதாக வருடாந்த செயற்றிட்டம்

தயார் செய்யப்படுவதுடன், 2015 ஆம் ஆண்டுக்காக அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்துள்ள நிறுவனங்கள் சம்பந்தமான வருடாந்த செயற்றிட்டம் தயார் செய்யப்பட்டது.

வருடாந்த செயற்றிட்டத்திற்கமைய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் முறையாக அமுல்படுத்தப்படுவதை அவதானித்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்கான 10 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டதுடன், பிரதானமாக வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறையின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை வினைத்திறனுடனும், விளைதிறன்மிக்கதாக்கவும் தேவையான அறிவுரை மற்றும் வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு அதன் மூலம் ஆற்றல் கிடைத்தது.

### * முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் கருத்திட்டப் பிரேரணைகள்

வருடாந்த செயற்திட்டத்திற்கமைய காலாண்டு அடிப்படையில் 2015 ஆம் ஆண்டில் 4 முன்னேற்ற அறிக்கைகள் தயார் செய்யப்பட்டதுடன் அவை உரிய நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டன. அவ்வாறே கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தினாலும் கருத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் கண்காணிப்புச் செய்யப்படுவதடன், அது சம்பந்தமான 4 முன்னேற்ற அறிக்கைகள் அமைச்சினால் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் மூலம் 2016 ஆம் ஆண்டில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங் களுக்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை சம்பந்தமாக அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள 21 கருத்திட்டப் பிரேரணைகளை திரைசேரியிடமிருந்து நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமர்ப்பிக்க முடிந்துள்ளது.

### * அமைச்சின் முன்னேற்றம் மற்றும் எதிர்காலத் திட்டங்களை உள்ளடக்கிய அறிக்கை

ஒவ்வொரு வருடமும் வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தின் போது சமர்ப்பிக்கப்படுகின்ற அமைச்சின் முன்னேற்றம் மற்றும் எதிர்காலத் திட்டங்களை உள்ளடக்கிய அறிக்கை இந்த ஆண்டும் அமைச்சு மற்றும் அதன் கீழ் இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் முன்னேற்றம் மற்றும் கருத்திட்டப் பிரேரணைகள், திட்டங்களுடன் அமைச்சினால் தயார் செய்யப்பட்டு உரிய நேரத்திற்குள் சமர்ப்பிக்க முடிந்தது.

### * அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு உதவி பெற்றுக் கொள்ளல்

அமைச்சினால் நாடு முழுவதிலும் அமுல்படுத்தப்படவுள்ள பாரிய வீடமைப்பு வேலைத்திட்டத்திற்கு ஜப்பான் அரசின் மற்றும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தின் (JAICA) ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்காக கௌரவ அமைச்சர் மற்றும் இலங்கையிலுள்ள ஜப்பான் தூதுவருக்கு இடையிலான விசேட கலந்துரையாடலொன்று 2015.09.18 ஆம் திகதி நடாத்தப்பட்டது. இதற்கு ஜப்பான் தூதுவரின் சாதகமான பதில் கிடைத்ததுடன், இதன் போது ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் விசேட கருத்திட்டங்களுக்கு உதவி பெற்றுக் கொள்வது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

## 9.3 வீடமைப்புப் பிரிவு

### * உலகக் குடியிருப்புத் தினம்

ஐக்கிய நாடுகள் அமைப்பினால் 1985ஆம் ஆண்டில் வருடாந்த கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையின் அடிப்படையில் 1986 ஆம் ஆண்டு முதல் கடந்த 28 வருடகாலமாக வீடமைப்பு மற்றும் குடியிருப்பு துறை சம்பந்தமான பல்வேறு தொனிப்பொருள்களின் கீழ் உலக குடியிருப்புத் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

ஐக்கிய நாடுகள் அமைப்பு ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் முதலாவது திங்கட்கிழமையை உலக குடியிருப்பு தினமாக கொண்டாடி வருவதுடன் 2015 ஆண்டு ஒக்டோபர் மாதம் 05 ஆந் திகதி இம்முறை உலக குடியிருப்புத் தினம் கொண்டாடப்பட்டது. இம்முறை உலக குடியிருப்பு தினத்தின் தொனிப்பொருள் "சகலருக்கும் திறந்த வெளி" என்பதாகும். இந்த சர்வதேச தினத்தை முன்னிட்டு வீடமைப்பு மற்றும் குடியிருப்புத்துறையில் மிகவும் பயன்வாய்ந்த நிகழ்ச்சித்திட்டமாக அமுல்படுத்தும் நோக்கத்துடன் மக்களின் அடிப்படைத் தேவைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தி கொழும்பு நகரத்தை பிரதானமாகக் கொண்டு நாடு முழுவதிலும் பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

இதற்கமைய இம்முறை உலக குடியிருப்புத் தினத்தை முன்னிட்டு அதன் பயன்களை வீட்டு உரிமையாளர்களான மக்களுக்கு பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன், அக்டோபர் மாதம் 05 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை "குடியிருப்பு வாரம்" எனப் பிரகடனம் செய்யப்பட்டது. இதன் போது மேற்படி வாரத்தில் பல்வேறு தொனிப்பொருள்களின் கீழ் சிறுவர் தினம், இளைஞர் தினம், சமுதாய தினம், உரித்துத் தினம், சிரமதான தினம் மற்றும் வீடமைப்புக் கருத்திட்டத் தினம் எனப் பெயரிடப்பட்டு குறித்த தினங்களின் போது மாவட்ட மட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

உலக குடியிருப்புத் தினத்தை உலகம் முழுவதிலும் அமுல்படுத்துகின்ற ஐக்கிய நாடுகள் அமைப்பின் விடயரீதியான அமைப்பான ஐக்கிய நாடுகளின் மனிதக் குடியிருப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் இலங்கைக்கான முகவர் நிறுவனமான வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்கள் வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்திக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளும் ஏனைய அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள் மற்றும் வேறு நிறுவனங்களின் ஒத்துழைப்பைப் பெற்று இம்முறை உலகக் குடியிருப்புத் தினத்தின் தேசிய நிகழ்வை 2015 அக்டோபர் மாதம் 05 ஆம் திகதி திங்கட்கிழமை கௌரவ வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச அவர்களின் தலைமையில் கொழும்பு 10, மாளிகாவத்தை வீடமைப்புத் திட்டத்தில் நடாத்தின. சகலருக்கும் திறந்த வெளி என்பதை அடைந்துகொள்ளும் வகையில் வீடமைப்புத் தொகுதியிலுள்ள திறந்தவெளிகளை அழங்கரித்தல் மற்றும் வசதிகளை மேம்படுத்துவதும் இடம்பெற்றன.

இதற்கு மேலதிகமாக, குடியிருப்புத் தினத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் நாடு முழுவதிலும் அமுல்படுத்தப்பட்டன. அதற்கமைய, நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் சுவர்களுக்கு சாந்துபூசாதிருந்த வீடுகளை ஒரு மாவட்டத்திலிருந்து 1000 வீடுகள் வீதம் தெரிவு செய்து ஒரு வீட்டுக்கு ரூபா 10,000 பெறுமதிமிக்க கட்டிடப் பொருட்களைப் பெற்று 25 மாவட்டங்களின் 25,000 வீடுகளுக்கு சாந்துபூசும் வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் தேசிய நிகழ்ச்சித்திட்டமாக அமுல்படுத்தப்பட்டது.

வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைய சகல மாவட்டங்களிலும் சிறுவர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள், சித்திரப் போட்டிகள், கைத்தொழில்சார்ந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், சிரமதானம், புதிய கருத்திட்டங்களின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்தல் போன்றன இதில் உள்ளடங்கின. இம்முறை உலக குடியிருப்புத் தினத்தை கொண்டாடு முகமாக வியாபாரிகளிடமிருந்து கிடைத்த அன்பளிப்புக்கள், நிகழ்ச்சித்திட்டங்களை ஊக்குவிப்பதாக அமைந்திருந்தன.

* **தேசிய வீடமைப்புத் தினம்**

வீட்டு உரிமையாளர்களின் பங்கேட்புடன் அமுல்படுத்தப்பட்ட தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் 1979 யூன் 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன், இது பிற்காலத்தில் நாடளாவிய தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டமாகவும்,

பங்கேட்பு வீடுமைப்பு அபிவிருத்தியை உலகிற்கு அறிமுகம் செய்வதற்கான பலம்வாய்ந்த கருத்திட்டமாகவும் அமைந்தது. இத்தினத்திற்குள்ள தேசிய முக்கியத்துவத்தை மதிக்கும் வகையில் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன், ஒவ்வொரு வருடமும் யூன் மாதம் 23 ஆம் திகதியை தேசிய வீடமைப்புத் தினமாக பிரகடனம் செய்வது இந்த ஆண்டில் இடம்பெற்றது. இம்முறை தேசிய வீடமைப்புத் தின விழா கௌரவ பிரதம அமைச்சரின் தலைமையில் திஸ்ஸமஹாராமயில் நடைபெற்றது.

* **ஹபிடாட் III தேசிய அறிக்கையைத் தயார் செய்தல்**

வீடமைப்பு மற்றும் நிலையான நகர அபிவிருத்தி பற்றிய ஐக்கிய நாடுகளின் மூன்றாவது மாநாடு (ஹபிடாட் III) 2016 ஆம் ஆண்டு நடாத்தப்படவுள்ளது. இது 20 வருடங்களுக்கு ஒரு தடவை நடாத்தப்படுவதுடன், இம்மாநாடு இந்த அமைப்பின் சகல அங்கத்துவ நாடுகளிலும் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி தொடர்பிலான கௌரவ அமைச்சர்கள் மற்றும் குறித்த நாடுகளின் தலைவர்களின் பங்கேட்புடன் நடாத்தப்படும்.

மேற்படி மாநாட்டுக்கு ஹாபிடாட் அமைப்பின் அங்கத்துவ நாடு என்ற வகையில் இலங்கை மிகவும் ஆக்கபூர்வமான பங்கேட்பை வெளிப்படுத்தியுள்ளது. 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற மாநாட்டின் தொணிப்பொருள் 'சகலருக்கும் வீடமைப்பு வசதிகள் மற்றும் நகர்ப்புற உலகில் நிலையான நகரக் குடியிருப்பு அபிவிருத்தி' என்பதாகும்.

மேற்படி தேசிய அறிக்கையைத் தயார் செய்தல் மற்றும் அதற்குச் சமாந்தரமாக கடந்த 10 வருட காலப்பகுதிக்குள் இலங்கையில் அமுல்படுத்தப்பட்ட பல்வேறு நிகழச்சித்திட்டங்களின் முன்னேற்றங்களை அறிக்கையிடுவது ஐக்கிய நாடுகள் மனிதக் குடியிருப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் இலங்கைக்கான பிரதிநிதி நிறுவனம் என்ற வகையில் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் முக்கிய பொறுப்பாகும்.

ஹபிடாட் III தேசிய அறிக்கை தற்போது தயார் செய்யப்பட்டு வருகின்றது.

* **வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.**

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை ஆகியன வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துகின்ற பிரதான நிறுவனங்களாகும் என்பதுடன், யாவருக்கும் புகலிடம் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம், மாதிரிக் கிராம வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம், வீடுகளுக்கு சாந்துபூசும் நிகழ்ச்சித்திட்டம், சம்பத் செவண வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் இந்திய உதவி வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் போன்றன இந்த ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களில் முக்கியமானவை ஆகும்.

மேலே குறிப்பிடப்பட்ட விசேட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் இந்த ஆண்டின் உத்தேச இலக்காகக் கொள்ளப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 111,686 ஆகும் என்பதுடன், ஆண்டின் இறுதியில் 76,824 வீட்டு அலகுகளின் வேலைகளை நிறைவு செய்ய முடிந்தது. இது விகிதமாகக் குறிப்பிடுகையில் 66% ஆகும்.

யாவருக்கும் புகலிடம் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உத்தேசிக்கப்பட்ட 50,000 வீட்டு அலகுகளில் 41,180 வீடுகளின் வேலைகளை நிறைவு செய்யும் ஆற்றல் அமைச்சுக்கு இந்த ஆண்டில் கிடைத்தது.

காணி மற்றும் வீடொன்று இல்லாத குடும்பங்களை இலக்காகக் கொண்டு இந்த ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட மாதிரிக் கிராமம் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரச நிதியைப் பயன்படுத்தி 38 கிராமங்கள் மற்றும் தனியார் துறையின் அன்பளிப்புக்களின் கீழ் 2 கிராமங்கள் என்ற வகையில் 25 வீடுகளைக் கொண்ட 40 கிராமங்களின் வேலைகளை ஆரம்பிக்கவும் ஆற்றல் கிடைத்தது. இதன் மூலம் புதிதாக 1000 வீட்டு அலகுகளை இலங்கையின் ஒட்டுமொத்த வீடுகளின்

எண்ணிக்கையில் இணைப்பதற்கு உத்தேசிக்கப்படுகின்றது.

இந்த ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் சாந்துபூசும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு விசேட இடம் கிடைத்துள்ளது. இதன் மூலம் நாட்டின் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் ஒரு மாவட்டத்திலிருந்து 1000 குடும்பங்களுக்கு தமது வீடுகளை மறுசீரமைத்துக் கொள்வதற்காக சீமேந்து மற்றும் ஏனைய கட்டிடப் பொருட்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. அதற்கமைய இந்த ஆண்டில் இலக்காகக் கொள்ளப்பட்ட 25,000 குடும்ப அலகுகளையும் தாண்டிச் சென்று பயன்களைப் பெற்றுக் கொடுக்க முடிந்ததுடன், அவ்வாறு பயன்களைப் பெற்றுக் கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை 28,673 ஆகும். இதற்காக செலவிடப்பட்ட நிதி ஏற்பாடுகள் ரூபா மில்லியன் 250 ஆகும்.

மேலும் தொடர்ச்சியான வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இந்த ஆண்டின் உத்தேச வீட்டு அலகுகளான 10,116 இல் 6492 வீட்டு அலகுகளின் வேலைகளை நிறைவு செய்யும் ஆற்றல் அமைச்சுக்குக் கிடைத்ததுடன், இது விகித அடிப்படையில் 64% ஆகும்.

- **காணி / வீடுகளுக்கான உறுதிகளைப் பெற்றுக் கொடுத்தல்**

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 8(1) உட்பிரிவுக்கு அமைய காணிகள் / வீடுகளின் சட்டபூர்வமான உரித்த நீக்கம் செய்வது இடம்பெறுவதுடன், இந்த ஆண்டில் இலக்காகக் கொள்ளப்பட்ட காணிகள் / வீடுகளின் உறுதிகள் 3000 இல் ஆண்டின் இறுதிக்குள் 2947 உறுதிகளை கையளிக்க அமைச்சுக்கு ஆற்றல் கிடைத்ததுடன் இது 98% ஆன விகிதமாகும். இதற்கு மேலதிகமாக 3244 குத்தகை உறுதிகளைப் பெற்றுக்கொடுக்கும் ஆற்றலும் இந்த ஆண்டில் கிடைத்தது.

- **கூட்டாட்சி ஆதனங்களுக்கான சான்றிதழ்களை வெளியிடல், முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் குழுக்களைப் பதிவு செய்தல்.**

அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள கூட்டாட்சி முகாமைத்துவ அதிகார சபையினால் கூட்டாட்சி ஆதனங்கள் தொடர்பிலான சான்றிதழ்களை வெளியிடும் பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன், கூட்டாட்சி ஆதனங்களின் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் குழுக்களை பதிவு செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

அதற்கமைய இந்த இலக்காகக் கொள்ளப்பட்ட பூரணமான, பகுதியளவிலான மற்றும் தற்காலிக கூட்டாட்சிச் சான்றிதழ்களை வெளியிடுவதானது 114 இல் 31 சான்றிதழ்களை வெளியிடக் கிடைத்தது. மேலும் உத்தேச முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களைப் பதிவு செய்தல், பதிவைப் புதுப்பித்தல் மற்றும் செயலிழந்துள்ள முகாமைத்துவக் கூடுத்தாபனங்களை மீளத் தாபித்தல் 603ஆக இருந்ததுடன், ஆண்டினுள் 451 எனும் முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளது.

## 9.4. தொழில்நுட்பப் பிரிவு

- **தேசிய நிர்மாணக் கொள்கை**

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் நிர்மாணக் கைத்தொழிலானது நேரடியான பங்களிப்பைச் செய்கின்றது. நிர்மாணக் கைத்தொழிலின் நிலைபேறான தன்மையை உறுதி செய்தல், மற்றும் பூகோள ரீதியில் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் பிராந்திய மட்டத்தில் போட்டித்தன்மை மிக்க மட்டத்திற்குக் கொண்டுவருவதற்காக நிர்மாணக் கைத்தொழில்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன், தேசிய நிர்மாணக் கொள்கையை ஏற்படுத்தும் தேவை நீண்டகாலமாக இருந்து வந்துள்ளது.

2014 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்திற்கு அமைய தேசிய நிர்மாணக் கொள்கையை தயார் செய்தல் வேண்டும்.

இந்த நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் மூலம் தேசிய நிர்மாணப் பேரவையை உருவாக்க வசதி செய்யப்பட்டுள்ளதுடன், இதன் அங்கத்தவர்களாக நிர்மாணத்துறையில் நேரடியாக சம்பந்தப்பட்டுள்ள அமைச்சுக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் நிறைவேற்று மட்டத்திலான அலுவலர்கள் 07 பேர், தொழில்வாண்மை நிறுவனங்களின் முகவர்கள் மற்றும் நிர்மாணிப்பு, சுற்றாடலியல், தொழில் உறவுகள், பொது சுகாதாரம் மற்றும் தொழில்சார் சுகாதாரம் ஆகிய துறைகளில் திறமைகளை வெளிப்படுத்தியுள்ள நிபுணர்களைக் கொண்ட நிர்மாண விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரினால் பெயரிடப்பட்ட அங்கத்தவர்கள் 15 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

நிர்மாணிப்பு பற்றிய தேசிய ஆலோசனைப் பேரவையை நியமனம் செய்வதன் முக்கிய நோக்கமாக இருப்பது, தேசிய நிர்மாணக் கொள்கையை தயார் செய்தல் மற்றும் அமுல்படுத்தல், நிர்மாணக் கைத்தொழிலின் அபிவிருத்தி மற்றும் நிலைத்திருத்தலுடன் தொடர்புடைய சிக்கல்கள் தொடர்பான சிபாரிசுகளைச் சமர்ப்பித்தலாகும். தேசிய நிர்மாணக் கொள்கையை அமுல்படுத்தும் பொறுப்பு சட்டத்திற்கு அமைய தாபிக்கப்பட்ட நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபைக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே வரைவு செய்யப்பட்டுள்ள தேசிய நிர்மாணக் கொள்கை தொடர்பில் விரிவாக கலந்துரையாடும் பொருட்டு தேசிய ஆலோசனைப் பேரவையின் அங்குரார்ப்பண கூட்டம் 2015.10.19 ஆம் திகதி வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சில் நடாத்தப்பட்டது. மக்களின் கருத்துக்களை வினவும் பொருட்டு தேசிய நிர்மாணக் கொள்கையின் வரைவு மும்மொழிகளிலும் அச்சு ஊடகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், நிர்மாணத் துறையின் சகல தரப்பினர்களினதும் கருத்துக்கள் மற்றும் பிரேரணைகளை எதிர்பார்த்து தேசிய நிர்மாணக் கொள்கையின் வரைவு, நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.cida.com இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

* **வழங்கல் குழுவை நியமனம் செய்தல் மற்றும் ஆலோசனைச் சேவைகளை வழங்கல்**

அமைச்சின் கீழ் காணப்பட்ட சகல திணைக்களங்களிலும் வழங்கல் குழுக்கள் 2015 ஆம் ஆண்டுக்கு நியமனம் செய்யப்பட்டதுடன், நிர்மாணக் கருத்திட்டங்களுக்கு வழங்கல் குழுக்களை நியமனம் செய்தல் மற்றும் வழங்கல் தொடர்பிலான ஏனைய பணிகள் அனைத்தையும் வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்வதற்காக அமைச்சினால் ஆலோசனைச் சேவைகள் வழங்கப்பட்டன. மேலும் ஒப்பந்த வித்தியாசங்களுக்கு அங்கீகாரம் வழங்குவதானது அமைச்சரவையின் தீர்மானத்திற்கு அமைய நேரடியாக அரச நிறுவனங்களுக்குக் கையளிக்கப்படுகின்ற நிர்மாணக் கருத்திட்டங்களின் விலைமனுக்களுக்கு இந்த அமைச்சின் நிலையான தொழில்நுட்பக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதும் முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன், நிர்மாணத் துறைக்குத் தேவையான தொழில்நுட்ப அறிவு மற்றும் சேவைகளை வழங்குவதும் முன்னைய ஆண்டுகளைப் போன்று இந்த ஆண்டிலும் தொடர்ச்சியாக அமைச்சினால் பேணிவரப்பட்டுள்ளன.

மேலும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் வெளியீடுகளை திருத்தியமைப்பதற்கு அமைச்சின் பங்களிப்பை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறே இந்த அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களில் அமைச்சின் வழங்கல் குழு மட்டத்திற்கு ஏற்புடையதான வழங்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* **நிர்மாணிப்பு அபிவிருத்தித் துறையின் கருத்திட்டங்களை அமுல்படுத்தல்**

இந்த அமைச்சின் கீழ் காணப்படுகின்ற அரச பொறியியல் கூட்டுத்தாபனம், அரச அபிவிருத்தி மற்றும் நிருமாணக் கூட்டுத்தாபனம், கட்டிடத் திணைக்களம் மற்றும் அரசாங்க தொழில்சாலை ஆகிய நிறுவனங்களை வழிநடாத்துவதன் கீழ் நிர்மாணக் கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன.

களனி பல்கலைக் கழகத்தின் வணிகப் பீடத்தின் மூன்று மாடிக் கட்டிடம், களனி

பல்கலைக் கழகத்தின் நூதன மொழிப் பீடத்தின் ஐந்து மாடிக் கட்டிடம், அத்துறுகிரிய நெடுஞ்சாலையின் பரிமாற்று நிலையம் மற்றும் அப்புத்தளை பொரலந்த வீதியின் ஹலுகம பாலத்தை நிர்மாணித்தல்
ஆகியன இந்த ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட நிர்மாணக் கைத்தொழில்களில் பூர்த்தி செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்ட கருத்திட்டங்கள் சிலவாகும் என்பதுடன், அதற்கு மேலதிகமாக நாடு முழுவதிலும் பாரியளவிலான கருத்திட்டங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலே குறிப்பிடப்பட்ட சகல கருத்திட்டங்கள் தொடர்பிலும் உரிய நிறுவனங்களை வழிநடாத்தல், நிர்மாணக் கருத்திட்டங்களை தடைகளின்றி மேற்கொள்வதற்கு உதவியளித்தல், நிதி ஏற்பாடுகளைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற அமைச்சு மட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய சகல பணிகளையும் முறையாக நிறைவேற்றிக் கொடுக்க அமைச்சு இந்த ஆண்டில் நடவடிக்கை எடுத்திருந்தது.

## 9.5 தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவு

1973 இன் 01 ஆம் இலக்க வீடமைப்பு சொத்தாண்மை உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்குச் பொறுப்பேற்கப்பட்ட வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு உறுதிகளைப் பெற்றுக்கொடுப்பது தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன், 2015 ஆம் ஆண்டில் 38 உறுதிகளை பெற்றுக்கொடுக்க முடிந்தது. மேலும் அரசுக்கு சுவீகரிக்கப்பட்ட வீடுகளின் உரிமையாளர்களுக்கு நட்டஈடு செலுத்தவும் 2015 ஆம் ஆண்டில் அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ள முடிந்துள்ளது.

வீடமைப்புச் சொத்தாண்மை உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு உறுதிகளைப் பெற்றுக்கொடுக்கும் போதும் ஒவ்வொரு வாடகைக் குடியிருப்பாளரிடமிருந்தும் வீட்டிற்கான விலைமதிப்புப் பெறுமதி அறவிட்டுக்கொள்ளப்பட்டதுன், 2015 ஆம் ஆண்டில் அவ்வாறு அறவிட்டுக்கொள்ளப்பட்ட தொகைகளை தேசிய வீடமைப்பு நிதியத்தில் செலவு வைக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

எவ்வாறாயினும் 2015 ஆம் ஆண்டில் தேசிய வீடமைப்பு ஆணையாளர் பதவிக்கு நியமனம் பெற்ற அலுவலர்கள் பதவி விலகல் மற்றும் இடமாற்றம் பெற்றமையினால் மேற்படி பதவி நான்கு தடவைகள் வெற்றிடமானதுடன், அதன் காரணமாக இலக்காகக் கொள்ளப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வது சவாலாக இருந்தது.

## 9.6 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

2015 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்திற்கமைய உத்தேச கணக்காய்வு அறிக்கைகள் 30 இல் 11 கணக்காய்வு அறிக்கைகளைப் பூர்த்தி செய்ய முடிந்த போதிலும், 19 கணக்காய்வு அறிக்கைகளின் வேலைகளை நிறைவு செய் முடியவில்லை. இதற்கான முக்கிய காரணம் விசாரணை நடவடிக்கைகளை வழிநடாத்துவத்றகும், கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பிலான அறிவைக் கொண்ட அனுபவம்மிக்க பதவியணியினர் இப்பிரிவில் இல்லாமையாகும். எவ்வாறாயினும் வருடாந்த கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைய உத்தேச 06 அடிப்படை விசாரணைகளில் 04 ஆரம்ப விசாரணைகளின் வேலைகளை நிறைவு செய்வதற்கு 2015 ஆம் ஆண்டில் ஆற்றல் கிடைத்து

மேலும் வருடாந்தம் நடாத்தப்பட வேண்டிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் 04 உம் ஒரு காலாண்டுக்கு ஒன்று வீதம் முறையாக நடாத்தப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் அமைச்சு மற்றும் அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் சம்பந்தமான சிக்கல்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு மற்றும் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டு அவற்றை சீர்செய்வதற்கும் சிக்கல்களைக் குறைத்துக்கொள்ளவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

# 2015 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட சில அபிவிருத்திக் கருத்திட்டங்கள்




உலகக் குடியிருப்புத் தின நிகழ்வு 2015



களனி பல்கலைக் கழகவத்தின் வர்த்தகப் பீடத்திற்கு மூன்று மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல்



பொரலந்த – அப்புத்தளை பாலத்தை நிர்மாணித்தில்



செவணகல வளவே C7 கால்வாயை புனரமைத்தல்



யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவக் கட்டிடத்தை நிர்மாணித்தல்



பேயாறு கருத்திட்டம்

# 11. 2016 ஆம் ஆண்டு அமைச்சு எதிர்நோக்கிய சவால்கள்

* **அமைச்சின் செயற்பணி விரிவடைந்தமை**

1897/15 ஆம் இலக்க 2015 சனவரி மாதம் 18 ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சாகக் காணப்பட்ட இந்த அமைச்சு வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சாக மாற்றியமைக்கப்பட்டதுடன், அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டு முன்னர் காணப்பட்ட நிறுவனங்களுக்கு மேலதிகமாக ஒரு சில நிறுவனங்கள் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டன. திவிநெகும அபிவிருத்தித் திணைக்களம், வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம், கிராம அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி அமைப்பு, தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு மற்றும் இலங்கை பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் ஆகிய நிறுவனங்கள் அவ்வாறு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்ட நிறுவனங்களாகும். இதன் மூலம் அமைச்சின் முன்னர் காணப்பட்ட விடயப்பரப்புக்கு மேலதிகமாக மேலும் பல விடயப்பரப்புக்கள் ஒன்றிணைக்கப்பட்டுள்ளதுடன், இதனூடாக பாரியதொரு செயற்பணியும், பொறுப்புக்களும் இந்த அமைச்சுக்கு நேரடியாகக் கையளிக்கப்பட்டுள்ளன.

மேலும் இல்லாதொழிக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தொடர்பில் காணப்பட்ட பூர்த்தி செய்யப்பட வேண்டிய அபிவிருத்தி கருத்திட்டங்கள் பலவற்றின் பணிகள் மற்றும் பொறுப்புக்களும் இந்த அமைச்சின் விடயப்பரப்புடன் இணைக்கப்பட்டன. இதன் காரணமாக கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் அமைச்சின் சகல பிரிவுகளினதும் செயற்பணி கனிசமானளவு அதிகரித்துள்ளதுடன், ஒவ்வொரு பிரிவுகளினதும் நாளாந்த பணிகளிலும் குறிப்பிடத்தக்களவு தாக்கம் இதன் மூலம் ஏற்படுத்தப்பட்டது.

* **அமைச்சின் பதவியணி விரிவடைந்தமை**

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு இல்லாதொழிக்கப்பட்டதை அடுத்து மேற்படி அமைச்சின் விடயப்பரப்பு தொடர்பிலான கிராமிய அபிவிருத்தி மற்றும் திவிநெகும ஆகிய பிரதான விடயப்பரப்புக்களில் கடமையாற்றிய அலுவலர்கள் சுமார் 80 பேர் இந்த அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டனர். இதன் காரணமாக அமைச்சின் பதவியணி குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. இவ்வாறு இணைப்புச் செய்யப்பட்ட அலுவலர்களுக்குப் போதிய இடவசதி அமைச்சிடம் இல்லாமை காரணமாக வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சை மூன்று வளவுகளில் தாபிக்க வேண்டி ஏற்பட்டது. இதனால் நாளாந்த பணிகளை மேற்கொள்ளும் போது அமைச்சின் அலுவலர்கள் பெரும் தடைகளை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது.

அத்துடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டு மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் சேவையாற்றிவந்த உதவிப் பணிப்பாளர்கள், அபிவிருத்தி உதவியாளர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள் சுமார் 20,000 பேர் வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டார்கள் என்பதுடன், இதன் காரணமாக அவர்களின் நிருவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பும் அமைச்சுக்கு நேரடியாகக் கையளிக்கப்பட்டது. மேற்படி அலுவலர்களின் நிருவாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் போதியளவு பதவியணியினர் அமைச்சின் தாபனப் பிரிவில் இல்லாமை காரணமாக தாபனப் பிரிவு கடும் அசௌகரியங்களை எதிர்கொண்டது. எவ்வாறாயினும் இந்த அனைத்து நடவடிக்கைகளையும் நல்ல முறையில் முகாமைத்துவம் செய்துகொள்ளும் ஆற்றல் அமைச்சுக்குக் கிடைத்ததுடன், இது இந்த ஆண்டில்

அமைச்சு எதிர்நோக்கிய சவால்களில் மிகவும் முக்கியமானதாகும்.

2015 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலை அடுத்து, அமைச்சின் விடயப்பரப்பு மீண்டுமொருமுறை மாற்றமடைந்ததை அடுத்து, மேலே குறிப்பிடப்பட்ட மேலதிக பதவியணியினர் உள்நாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டனர். அதற்கமைய, 2015 ஆம் ஆண்டின் இறுதியில் அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி குறிப்பிடத்தக்களவில் குறைந்தது.

### * அமைச்சின் விடயப்பரப்புடன் இணைக்கப்பட்ட நிறுவனங்களில் காணப்பட்ட நிறுவன ரீதியான பலவீனங்கள்

திவிநெகும அபிவிருத்தித் திணைக்களம், கிராம அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களின் பதவியணிகளில் காணப்பட்ட பலவீனங்கள் மற்றும் ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதிகள் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருக்காமை போன்ற காரணங்களினால் மேற்படி சிக்கல்கள் தொடர்பாக அமைச்சின் நிருவாகப் பிரிவு விசேட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

### * நிரந்தர பதவிகளின் வெற்றிடங்களை பூர்த்தி செய்துகொள்ள முடியாது போனமை

அமைச்சுக்கு அங்கீகரிக்கப்பட்டிருந்து பிரதம நிதி அலுவலர் பதவியும், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அலுவலர் பதவியும், இலங்கை கணக்காளர் சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த அலுவலர்கள் மற்றும் இலங்கை தகவல் தொழில்நுட்பச் சேவையின் அலுவலர்களின் பற்றாக்குறை காரணமாக இந்த ஆண்டில் வெற்றிடமாகக் காணப்பட்டன. மேலும் தேசிய வீடமைப்பு ஆணையாளர் பதவி 2015 ஆம் ஆண்டில் நான்கு தடவைகள் வெற்றிடமானதன் காரணமாக மேற்படி பிரிவின் பணிகளுக்கு கடுமையாக தடை ஏற்பட்டதுடன், கனிய அளவையாளர் பதவியும் குறித்த ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதிகளில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் காரணமாக தொடர்ந்தும் வெற்றிடமாகக் காணப்பட்டது.

அத்துடன், இணைந்த சேவைகளுக்கு உரித்தான அபிவிருத்தி அலுவலர் சேவை மற்றும் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அலுவர்களின் இடமாற்றம் மற்றும் ஓய்வுபெற்றதன் காரணமாக ஆண்டு முழுபதிலும் அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் முகாமைத்துவ உதவியாளர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அதன் காரணமாக அமைச்சின் நாளாந்தப் பணிகளை முறையாக நிறைவேற்றிக் கொள்வதில் தடைகள் ஏற்பட்டன.

### * வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும் போது எதிர்நோக்கிய சவால்கள்

2015 ஆம் ஆண்டு முழுவதிலும் யாவருக்கும் புகலிடம் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தை பிரதானமாகக் கொண்டு வீடமைப்பு நிர்மாண் நிகழ்ச்சித்திட்டங்கள் பல அமுல்படுத்தப்பட்டதுடன், மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களுக்குத் தேவையான ஏற்பாடுகளை அரச திறைசேரி ஊடாக விடுவித்துக் கொள்வதில் காணப்பட்ட தாமதம், வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்தான உத்தேச முன்னேற்றத்தை உரிய காலப்பகுதிக்குள் அடைந்துகொள்ள முடியாது போனதில் கடுமையாக தாக்கம் செலுத்தியது.

மேலும், பல தசாப்தங்களின் பின்னர் அமுல்படுத்தப்பட்ட பங்கேட்பு அபிவிருத்தி முறையியல் தொடர்பில் ஒருசில பயனாளிகள் மற்றும் நிறுவனங்களில் சேவையாற்றுகின்ற புதிய அலுவலர்களுக்கு அனுபவம் குறைவாக உள்ளதனால் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிக்கும் போதும், அமுல்படுத்தும் போதும் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படடது.

யாவருக்கும் புகலிடம் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டதின் கீழ் மாதிரிக் கிராம நிகழ்ச்சித்திட்டத்திற்கு உகந்த காணிகள் மற்றும் பயனாளிகளைத் தெரிவு செய்துகொள்வதில் இடம்பெற்ற தாமதம் காரணமாக மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தை 2015 செப்தெம்பர் மாதம் இறுதிப்பகுதியில் ஆரம்பிக்க வேண்டி ஏற்பட்டதுடன், அதன் பின்னர் நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலையின் தாக்கம் காரணமாக 2015 ஆம் ஆண்டின் இறுதியில் மேற்படி அனைத்துக் கிராமங்களினதும் வேலைகளை நிறைவு செய்யும் ஆற்றல் கிடைக்கவில்லை.

### * நிர்மாணத் துறையில் எதிர்நோக்கிய சவால்கள்

இந்த அமைச்சின் கீழ் நிர்மாணக் கருத்திட்டங்களை அமுல்படுத்துகின்ற நிறுவனங்களுக்கு நிர்மாணக் கருத்திட்டங்களைப் பெற்றுக்கொடுக்கின்ற பிரதான வழிமுறையாக இருப்பது அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் கருத்திட்டங்களைப் பெற்றுக் கொடுப்பதாகும். மேலும் மேற்படி கருத்திட்டங்களில் பெரும்பாலானவை அரச துறை கருத்திட்டங்களாகும். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டில் அமைச்சுக்கு கிடைத்த நிர்மாணக் கருத்திட்டங்களில் வீழ்ச்சி காணப்பட்டது.

மேலும் சேவை பெறுநர்களான நிறுவனங்களினால் தேவையான நிதி ஏற்பாடுகளைப் பெற்றுக் கொடுப்பது தாமதமடைதல், நிறைவு செய்யத் தேவையான அங்கீகாரங்களை பெற்றுக் கொள்வது தாமதமடைதல் மற்றும் கருத்திட்டத்தின் ஆரம்பத்திலிருந்த சேவை பெறுநர் மாற்றமடைதல் போன்ற காரணங்களினால் குறித்த காலப்பகுதிக்குள் நிர்மாணக் கருத்திட்டங்களை நிறைவு செய்வதற்கு அற்றல் கிடைக்காமை இந்த ஆண்டில் நிர்மாணத் துறை எதிர்நோக்கிய பிரதான சவாலாகும். மேலும் ஆண்டு முழுவதிலும் காணப்பட்ட சீரற்ற காலநிலையும் நிர்மாணக் கருத்திட்டங்கள் குறைவடையக் காரணமாக அமைந்தது.



නිවාස හා ඉදිකිරීම් අමාත්‍යාංශය
வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு
Ministry of Housing & Construction